மஹா சித்தி கல்ப்ப ரசாயனமும்
ஆசிர்வாத தைலமும்



முட்டுவாதம், வாத நோய்கள், உடல் மெலிவு, மாதவிடாய் தாமதம், இரத்தக் குறைவு ஆகிய நோய்களுக்கு சிறந்த நிவாரணி. 30 நாட்களுக்கான ரசாயனம் ரூ 35/- தைலம் 2 அவுன்ஸ் போத்தல் ரூ 15/- தபால் செலவு 10/25.

Dr W. K. Jinadasa
161, Olcot Mawatha,
Colombo — 11.

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6539 1990 மார்ச் 15 வியாழக்கிழமை * * * தினபதி

வஜீகரண ரசாயனமும்
தைலமும்



திருமண வாழ்க்கை சிறக்கவும், வாழ்க்கையின் பூரணத்துவத்தைப் பெறவும் அதிசிறந்த ஔஷதம் 30 நாட்களுக்கான ரசாயனம் ரூ 35/- 2 அவுன்ஸ் தைலம் 15/- தபால் செலவு ரூ 10/25.

Dr. W. K. Jinadasa
161, Olcot Mawatha,
Colombo — 11.

காஷ்மீர் பற்றி அசாதாரண முறையில் விசேஷ விவாதம்

# பாகிஸ்தானுக்கு இந்திய உள்துறை அமைச்சர் ஸயீத் எச்சரிக்கை

## பெனாஸிர் பூட்டோவும் இந்தியாவுக்கு எச்சரிக்கை

புதுடில்லி, மார்ச் 14

காஷ்மீரில் எழுந்துள்ள நிலைமை குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் அசாதாரண முறையில் விசேஷ விவாதம் நேற்றும் நேற்று முன்தினமும் நடந்தது. விவாதத்தின்போது இந்திய உள்துறை அமைச்சர் ஜனாப் முப்தி முகம்மது ஸயீத் பாகிஸ்தானுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார்.

பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோவும இந்தியாவுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தார்.

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியா வழங்க வேண்டும. தவறினால் காஷ்மீர் மக்களே காஷ்மீரை இந்தியாவிடமிருந்து பறித்து எடுத்துக் கொள்வார்கள் என்று அவர் இந்தியாவை எச்சரிக்கை செய்தார்.

"காஷ்மீர் மக்களின் சுதந்திரப் போராட்டம எமது போராட்டத்துக்கு ஈடானது, பாகிஸ்தான் மீது இந்தியா சுமத்தி வரும குற்றச் சாட்டுகள் ஏற்க முடியாதவை" என்றும பெனாசிர் பூட்டோ சொன்னார்,

(விவரம 5 ஆம பக்கம)

## கூட்டம் நடத்த

## யாழ் மாவட்டத்தில் தங்க நகைகள் விற்பனை கிராம் கணக்கில்

தோப்பாய், மார்ச் 13

தங்க நகை விற்பனை மெட்ரிக் அளவை முறையில் அதாவது கிராம கணக்கிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும- இதனை மீறுவோருக்கு எதிராக கடும நடவடிக்கை எடுக்கப்படும-

யாழ் மாவட்ட தங்க நகை வர்த்தகர்களுக்கு இப்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது-

(2 ஆம பக்கம பார்க்க)

### சோமண்ணை



மட்டக்களப்பு மீனையும மற்ற இடத்து மீனையும எப்பிடி அடையாளம காணுறது பாருங்கோ-

பௌத்த சாசன நிதிய சட்டவரைவு

## முதல் நாள் விவாதம் பற்றி நேற்று பலத்த சர்ச்சை

கொழும்பு, மார்ச் 14

பௌத்த சாசன நிதியச் சட்டவரைவு மீது கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதம நேற்று பலத்த சர்ச்சைக்கு உள்ளானது- மதிய போசன இடைவேளையின் போது நடைபெற்ற நிகழ்ச்சிகள் செல்லுபடியாகா என்று கூறியும அவற்றை நீக்குமாறு கோரியும சபை முதல்வர் திரு ரணில் விக்கிரமசிங்க நேற்று ஒழுங்குப் பிரச்சினை கிளப்பினார்-

அதை அடுத்தே அரசாங்கக் கட்சியினருக்கும எதிர்க்கட்சியினருக்குமிடையே பலத்த சர்ச்சை எழுந்தது-

சட்டவரைவுக்கு எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த திருத்தம செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் அரசாங்கம முதல் தடவையாகத் தோல்வி கண்டது- அதன் எதிரொலிதான் இந்த ஒழுங்குப் பிரச்சினை என்று எதிர்க்கட்சியினர் கூறினர்-

நாடாளுமன்றம நேற்றுக் காலை 9-00 மணிக்கு சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகமமது தலைமையில் கூடியது-

அவ்வேளையில் சபை முதல்வரும கைத்தொழில் அமைச்சருமான திரு ரணில் விக்கிரமசிங்க ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்-

நேற்று முன்தினம செவ்வாய்க்கிழமை மதிய உணவு வேளையின்

(2 ஆம பக்கம பார்க்க)

### சபாநாயகர் தீர்ப்பு இன்னும் சில தினங்களில்

கொழும்பு மார்ச் 14

பௌத்த சாசன நிதியச் சட்டவரைவு மீது கடந்த செவ்வாய்க்கிழமை மதிய போசன இடை வேளையின் போது நடை பெற்ற விவாதமும மற்றும நிகழ்ச்சிகளும செல்லுபடியாகா என்று சபை முதல்வர் நேற்று கிளப்பிய ஒழுங்குப் பிரச்சினை மீது தாம தீர்ப்பு வழங்க சில தினங்கள் செல்லும என்று சபா

(2 ஆம பக்கம பார்க்க)

பல சம்பவங்களின் சூத்திரதாரியான

## பட்டதாரி ஆசிரியர் பாதுகாப்பில் கைது

கொழும்பு, மார்ச்- 14

தெனியாய மற்றும் "மொரவக்க பகுதிகளில் இடமபெற்ற பல கொலை கொள்ளைச் சமபவங்களின்

தொழில் வாய்ப்புப் பெற்று வெளிநாடு செல்வதாகக் கூறி அவிசாவளைப் பகுதியில் தலைமறைவாகி இருந்தபோதே இவர் கைது செய்யப்பட்டார்-

(2 ஆம பக்கம பார்க்க)

ஜம்மு - காஷ்மீர் பிரச்சினை குறித்து இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்கள் அவையான

(2 ஆம் பக்கம் பார்க்க)

கொள்ளைச் சம்பவங்களின் சூத்திரதாரியான பட்டதாரி ஆசிரியர் ஒருவர் நேற்றுக் காலை பாதுக்கை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சியினருக்கு அனுமதி மறுப்பது ஏன்?

### — சிறிமா

கொழும்பு, மார்ச் 14

வடக்கு கிழக்கில் புலிகளும தெற்கே ஐக்கிய தேசியக் கட்சியும கூட்டங்களை நடத்தும் போது எதிர்க்கட்சிகளுக்கு மட்டும அனுமதி வழங்க மறுப்பது ஏன்?

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்—

நேற்றுக்காலை 9-00 மணிக்கு நாடாளுமன்றம் கூடிய போது எதிர்க்கட்சித் தலைவி இது தொடர்பாக அறிக்கை ஒன்றை சமாப்பித்துப் பேசினார்—

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சி. நாடாளுமன்றத்திலும பல மிக்க எதிர்க்கட்சியாக இயங்குகிறது—

ஆனால் எமது கட்சிக்கு பொதுக் கூட்டங்களை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது—

அமைதியான முறையில் பொதுக் கூட்டம நடத்த யாது காப்பு அமைச்சரிடம அனுமதி கேட்டு விண்ணப்பித்தோம—

ஆனால் நாட்டின் நிலைமை சீராக இல்லை— இப்போது அரசியல் கட்சிகளின் பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி வழங்க முடியாது என பதில் கிடைத்தது—

அதேவேளை மனித வேட்டையாடி வரும புலிகள் எந்தவித மான கட்டுப்பாடும இன்றி வடக்கு கிழக்கு பகுதிகளில் பொதுக் கூட்டங்களை நடத்தி வருகின்றன—

மேலும ஆளும கட்சியினர் மகளிர் தினம, இளைஞர் தினம. யொவுன்புர, கமஉதாவ என பல் வேறு பிரசாரக் கூட்டங்களை தென் பகுதியில் நடத்தி வருகின்றனர்—

இவர்கள் கூட்டங்களை நடத்தும போது மட்டும அவசரகாலச் சட்டம கடைப்பிடிக்கப்படாதது ஏன்?

இப்படி திருமதி பண்டாரநாயக்கா கேள்வி எழுப்பினார்—

[ந—ய]

மட்டுநகர் கச்சேரியில்

## அரச அதிபர் அலுவலகம்: 8 மாதமாக திறக்கப்படவில்லை

மட்டக்களப்பு, மார்ச் 13

மட்டக்களப்பு கச்சேரியில் அரச அதிபரின் அலுவலகம கடந்த எட்டு மாதத்திற்கு மேலாக திறக்கப்படவில்லை—

"வெளியே" என்ற அறிவிப்புப் பலகையை மாத்திரமே காணக் கூடியதாக இருக்கிறது—

இந்த நிலைமை காரணமாக பொது மக்கள் பெரிதும பாதிக்கப்பட்டிருக்கின்றனர்— அவர்களுக்குரிய தொடுப்பனவுகள் உரிய வேளையில் கிடைப்பதில்லை—

"அரச அதிபர் இல்லை", "அரச அதிபரைக் கேளுங்கள்" என்ற பதில்களைத்தான் பொது மக்கள் அன்றாடம கேட்க நேரிடுகிறது—

பொது மக்கள் தங்களது கருமங்களை முடித்துக் கொள்ள முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும அவல நிலையைத்தான் காண முடிகிறது—

[ந—ங—து]

## மீன் உண்ண வேண்டாம் என மட்டக்களப்பில் எச்சரிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 13

மட்டக்களப்பில் மீன் உண்ண வேண்டாம என பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது—

மட்டக்களப்பு வாவி மற்றும உன்னிச்சை, நாகம, வாகனேரி ஆகிய குளங்களில் உள்ள மீன் இனங்களுக்கு ஒருவகை வைரஸ் நோய் ஏற்பட்டிருக்கிறது என மாவட்ட மீன்பிடித் திணைக்களம அறிவித்திருக்கிறது—

வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாக மீன்களுக்கு வைரஸ் நோய் ஏற்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடி பரிசோதகர் திரு எஸ் டி ஜோர்ஜ் தெரிவித்தார்—

மீன்களின் கண் மற்றும வால் பகுதிகளில் புண்கள் ஏற்பட்டு சில நாட்களில் அவை இறந்து விடுகின்றன— இறந்த மீன்களில் புண்களை காண முடிகிறது என்றும அவர் கூறினார்—

உன்னிச்சைக்குளப் பகுதியில் பெருமளவு மீன்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்கி இருக்கின்றன—

இதனைத் தொடர்ந்து கச்சேரி உயர் அதிகாரிகளும மீன்பிடித் திணைக்கள உயர் அதிகாரிகளும கடந்த ஞாயிறு இப்பகுதிக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்தனர்—

இதன் பின்னரே மீன் உண்ணக் கூடாது என அறிவிக்கப்பட்டிருக்கிறது—

[ந—ங—து]

அட்டனில்

## மதிய உணவுக்கு பின் மாணவர்கள் வாந்தி மயக்கம்

அட்டன், மார்ச்- 14

அட்டன் ஸ்ரீபாத சிங்கள மகா வித்தியாலய மாணவர்களில் நூற்றுக்கும அதிகமானோர் நேற்று மதிய உணவாக பணிஸ் சாப்பிட்டதன் பின்னர் வாந்தி மயக்கத்திற்கு உள்ளாகினர்—

இவர்கள் உடனடியாக டிக்கோயா மற்றும கொட்டகலை மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்—

சிகிச்சைக்குப் பின் பலர் வெளியேறினர்— சிலர் மருத்துவமனையில் நிறுத்தப்பட்டனர்—

சம்பவத்தைத் தொடர்ந்து பெற்றோர் பாடசாலையையும மருத்துவமனைகளையும சூழ்ந்து கொண்டனர்— (உ—ங—096)

காலிமாவட்ட ஐ. தே. க. அமைப்பாளர் அமரசிறி

கொழும்பு, மார்ச்- 14

தென் மாகாண முதலமைச்சர் திரு எம் எஸ் அமரசிறி காலி மாவட்ட ஐ தே கட்சி அமைப்பாளராக நியமிக்கப்படவுள்ளார்—

அண்மையில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது—

பதில் அமைப்பாளராக திரு ரூபா கருணாதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார்—

புலப்பிட்டி பகுதிக்கான கட்சி அமைப்பாளராக திரு காலிங்க ஒபேவன்ச நியமிக்கப்பட்டுள்ளார்—

(நு-ர)

## ஒட்டிப் பிறந்த இரட்டையர்

கொழும்பு, மார்ச்- 14

புத்தளம் மாவட்ட ஆஸ்பத்திரியில் இளம தாய் ஒருவர் ஒட்டிப் பிறந்த இரு குழந்தைகளை பிரசவித்தார்—

சிறிது நேரத்தின் பின்னர் மேற்படி இரு குழந்தைகளும மரணமாகின—

இரு தலைகள், நான்கு கைகள் நான்கு கால்களுடன் பிறந்த இக்குழந்தைகள், வயிறு, மற்றும மார்புப் பகுதிகளால் இணைந்திருந்தன—

ஒக்கம்பிட்டி, புஹுலகம பகுதியைச் சேர்ந்த இளம தாய் ஒருவரே மேற்படி குழந்தைகளை பிரசவித்தார்—

(நு-ர)

வடக்கு கிழக்கில்

## 4000 பேருக்கு பயிற்சி ஆசிரியர் நியமனம்

### 20 ஆம் திகதி முதல்

கொழும்பு, மார்ச் 14

வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த நாலாயிரம பேருக்கு இம்மாதம 20 ஆம திகதி பயிற்சி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும—

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவின் விசேஷ பணிப்புரையின் பேரில் கல்விச் சேவைகள் ஆணைக்குழு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது—

மார்ச் மாதம முதலாம திகதியே இப்பகுதி பயிற்சி ஆசிரியர் நியமனம வழங்கப்படவிருந்தது.

ஆனால் பயிற்சி ஆசிரியர் நியமனம தொடர்பாக ஆயிரக்கணக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# மின்சார சபைக்கு

# ரூ. 2400 கோடி தேவை

## அமைச்சர் பெஸ்டஸ் தகவல்

கொழும்பு, மார்ச்— 14

மின்சார சபைக்கு அடுத்த மூன்று வருடங்களுக்கு 2400 கோடி ரூபா தேவைப்படுகிறது.

எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா இப்படி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படுவது தொடர்பாக அமைச்சில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது,

அரசு 2000 ஆம் ஆண்டளவில் அனைத்து கிராமங்களையும் மின்சாரமயப்படுத்த திட்டமிட்டுள்ளது,

தற்போது இலங்கையில் 25 வீதமான வீடுகளிலேயே மின்சாரம் உபயோகிக்கப்படுகின்றது, 25 ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் தேவைப்படுகின்றது,

இவ் 25 ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டங்களில் 8 ஆயிரம் திட்டங்கள் பூர்த்தியாகி விட்டன, எஞ்சிய திட்டங்களை முடிக்க மின்சார சபைக்கு அடுத்த 3 வருடங்களுக்கு 2400 கோடி ரூபா தேவைப்படுகிறது,

மின்சார சபைக்கு தமது புதிய கண்டு பிடிப்புகளையும், ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் வழங்க முன்வரும் இளைஞர்களுக்கும், நிபுணர்களுக்கும் எனது அமைச்சு முழு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறது,

இதில் 30வீத (800 கோடி ரூபா) தொகை மின்சார சபை நிதியத்திலிருந்தே திரட்ட வேண்டியுள்ளது, எஞ்சிய தொகையான 1600 கோடி ரூபாவை உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிலிருந்து பெற இருக்கிறோம்,

மின் கொடுப்பனவுக்குப் போதிய வருமானம் இல்லா. விடில் யாரும் இவ்வளவு பெரிய தொகையை கடனாகக் கொடுக்க மாட்டார்கள்.

1987 ஆம் ஆண்டில் 29 ரூபாவாக இருந்த அமெரிக்க டாலர் இப்போது 40 ரூபாவாக உயர்ந்துள்ளது, இவற்றை கவனத்திற் கொண்டு மின் கட்டணத்தை உயர்த்த வேண்டியதாகி விட்டது,

முதல் 50 யுனிட்டுகளுக்கான கட்டணத்தில் எந்தவித மாற்றமும் இருக்காது, உள்ளூர் வீட்டுப் பாவனையாளர்கள் மாதமொன்றுக்கு 50 யுனிட்டுகளுக்கும் குறைவாகவே பயன்படுத்துகிறார்கள்.

இதனால் குறைந்த வருமானம் உள்ளவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

51 யுனிட்டிலிருந்து 100 யுனிட் வரையில் இனிமேல் யுனிட் ஒன்றிற்கு 2 ரூபா அறவிடப்படும் 101லிருந்து 450 வரை யுனிட் ஒன்றிற்கு 3 ரூபாவும் 450க்கு மேல் யுனிட் ஒன்றிற்கு 4 ரூபாவும் அறவிடப்படும்.

திருட்டுத்தனமாக மின்சாரத்தை உபயோகித்தவர்கள் பலர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். இதனால் சபைக்கு வருமானமும் கிடைத்தது, இதனால் 100க்கு 20 வீதமாக இருந்த இழப்பு இப்போது 9 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது,

இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மலேஷியா பங்களாதேஷ், இந்தியா போன்ற ஏனைய ஆசிய நாடுகளுடன் எமது நாட்டை ஒப்பிடும் போது எமது கட்டணம் இன்னமும் குறைவாகவே உள்ளது,

சபுகஸ்கந்தையில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை 300 லட்சம் ரூபா செலவில் அமைச்சு சீரமைக்க உள்ளது,

காஸ் கம்பெனி ஊருகொடவத்தையில் காஸ் சேமிப்பு நிலையமொன்றை அமைக்க உள்ளது,

அணுசக்தி, அதிகார சபை ஒன்றையும் ஏற்படுத்த நாம் திட்டமிட்டு இருக்கிறோம்,

எரிசக்தி மின்சக்தி அமைச்சில் உள்ள செயற்பாட்டு அறையை பத்திரிகையாளர்களுக்கு பார்வையிட அழைத்த போது அந்த அறை பூட்டப்பட்டு இருந்தது.

எப்பொழுதும் திறந்திருக்க வேண்டிய அறையை பூட்டி வைப்பதால் மின்சாரம், எரிபொருள் விநியோகம் தொடர்பாக விளக்கம் அளிக்கக் கூடிய அலுவலர் ஒருவரை உடனேயும் நியமிக்க தமது செயலாளரை அமைச்சர் பணித்தார்,

இம்மாநாட்டில் ராஜாங்க அமைச்சர் மேர்வின் குரே, செயலாளர்கள் மின்சார சபை பெற்றோலிய கூட்டுத்தாபனம், காஸ் கம்பெனி ஆகியவற்றைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(இ-கு)

## பௌத்தர்கள் வசித்த சகல பகுதிகளையும் கலாசார பிரதேசத்திற்குள் சேர்க்கவும்

### சுதந்திரக் கட்சி உறுப்பினர்

கொழும்பு, மார்ச்— 14

இலங்கையில் சிங்கள பௌத்த மக்கள் வாழ்ந்த பாரம்பரிய பிரதேசங்களை எல்லாம் கலாசார முக்கோணப் பிரதேசத்தினுள் சேர்க்க வேண்டும்—

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம் பி திரு ஆனந்த தசநாயக்கா இவ்வாறு நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பேசினார்

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள் ... முக்கிய பாரம்பரிய கலைகள் பற்றி அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்—

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 6 மாவட்டங்களில் தொல்பொருளியல் ஆய்வுகள் நடத்தப்படுகின்றதா? உங்களால் அது முடியாது— அந்தப் பகுதியில் பல விகாரைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன—

திருமலை என்பது பழைய போபன்னை என்று கூறப்படுகின்றது— இங்கு புதைந்து கிடக்கும் ...

## 4,000 பேரு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

தான முறைப்பாடுகள் கிடைத்தன—

...ந்த முறைப்பாடுகளை மீள்

## முதல் நாள்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

போது சபை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றது செல்லுபடியாகாது—

அந்த சந்தர்ப்பத்தில் இடம் பெற்ற நிகழ்ச்சிகளை செல்லுபடியற்றதாக்க வேண்டும்—

இடைவேளையின் போது நடைபெற்ற சம்பவங்கள் ஏற்க முடியாதவை என ஒழுங்குப் பிரச்சினையை அவர் எழுப்பினார்—

சபை முதல்வரின் இந்தக் கூற்றை எதிர்க்கட்சியினர் வன்மையாகக் கண்டித்தனர்—

இவ்வேளையில் ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையில் பலத்த சட்ட வாக்குவாதங்கள் ஏற்பட்டன—

அரசாங்கத்திற்கு ஏற்பட்ட தோல்வியை மூடி மறைப்பதற்காகவே சபை முதல்வர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி உள்ளார்,

சபையில் சமுகம் அளிக்காத அமைச்சர்களும் உறுப்பினர்களும் ஜனாதிபதியின் தண்டனையிலிருந்து தப்புவதற்காகவே இந்த ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பி உள்ளார்—

மதிய உணவு வேளையின் போதோ அல்லது பிற்பகல் அமர்வு நேரங்களுக்குப் பின்னரோ சபை நிகழ்ச்சிகளை நீடிப்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல— அது நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை மீறும் செயல் அல்ல என்றும் எதிர்க்கட்சியினர் வாதிட்டனர்—

ஆளும் கட்சியினர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணியான திரு சொக்ஸி நிலையியற் கட்டளை விட முடியுமா என்று அவர் கேள்வி எழுப்பினார்—

சபைக்கு தலைமை வகிப்பவர் எவராக இருந்தாலும் அவருக்கும் சபாநாயகருக்கு உரிய உள்ளா அதிகாரங்களும் உண்டு, பிரதி சபாநாயகரோ அல்லது குழுக்களின் பிரதித் தலைவரோ வழங்கிய தீர்ப்பை சபாநாயகரால் ரத்து செய்ய முடியாது—

நிலையியற் கட்டளைகள் சட்டத்தில் அதற்கு இடம் இல்லை என ஸ்ரீ ல சு க உறுப்பினர் திரு எஸ் எல் குணசேகர சுட்டிக் காட்டினார்—

இடைவேளையின் போது சபையில் பிரதமர், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களும் இருந்தனர்— அவ்வேளையிலேயே திருத்தப் பிரேரணையின் போது அரசு தோல்வி கண்டது—

பிரதமரும் மற்ற உறுப்பினர்களும் வாக்களித்தனர்— கோரம் மணி ஒலிக்கப்பட்ட போது அங்கத்தவர்களைத் தேடி ஓடி அலைந்தனர்—

அப்போது இதனை ஆட்சேபிக்கவில்லை— அப்போது தூங்கிக் கொண்டிருந்து விட்டு இப்போது ஜனாதிபதியின் தண்டனைக்குப் பயந்து ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவது கண்டிக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீ ல சு க உறுப்பினர் திரு ஜயரதன கண்டனம் தெரிவித்தார்—

சிங்களம் மட்டும் கோஷம் ஏற்கனவே பாடப்பட்டுள்ளது— இப்போது பௌத்தம் மட்டும் என்று ஒரு வாதம் தேவை ...



# கண்டி மாவட்டத்தில் 1745 வீடுகள் அமைப்பு

கண்டி, மார்ச் 13

12 ஆவது (ஆதர்ஷ கம உதாவ) கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் 1745 வீடுகள் நிர்மாணிக்கப்படும்—

மாதிரி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 92 வீடுகளும நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 145 வீடுகளும,

பல்லேகல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 1508 வீடுகளும இவ்வாண்டில் நிர்மாணிக்கப்படும்—

இந்த வீடமைப்புத் திட்டம ஜூலை மாதம 23 ஆம திகதி ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவினால் திறந்து வைக்கப்படும—

பல்லேகலையின் ஆதர்ஷ வீடமைப்புத் திட்டத்தில் மத்திய மாகாண சபைக்கான மாநாட்டு மண்டபமும் மற்றும அலுவலகங்களைக் கொண்ட கட்டிடங்களும இங்கு நிறுவப்படும—

இதேவேளையில் 15 லட்சம வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 14000 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொள்ள வங்கிகள் மூலம் கடனும வழங்கப்படும—

12 ஆவது கிராம எழுச்சி வேலைத் திட்டங்கள் பலவும வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு பீ சிறிசேன குரேயின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன—

அதற்கமைய அமைச்சர் அடிக்கடி பல்லேகலைக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்து வருகிறார்—

இந்த வேலைத் திட்டங்கள் இப்பொழுது சுறுசுறுப்பாக நடைபெற்று வருவதுடன் நாளொன்றுக்கு ஐநூறுக்கும மேற்பட்ட தொழிலாளர்கள் இங்கு பணி புரிந்து வருகின்றனர்—

[இ—017]



# குழந்தையை வெட்டிக் கொலை செய்த தாய்!

கண்டி, மார்ச் 13

ஒரு தாய் தனது ஒருநாள் வயதுடைய குழந்தையை மன்னாக் கத்தியால் வெட்டிக் கொலை செய்துள்ளார்—

இதனால் இத்தாய்க்கு கண்டி மேல் நீதிமன்றம ஒத்திவைக்கப் பட்ட சிறைத் தண்டனை விதித்தது—

இச் சம்பவம 1987 ஆம ஆண்டு ஏப்ரல் மாதம 30 ஆம திகதி நடந்துள்ளது— உடதும்பறையைச் சேர்ந்த கொபோனில் தோட்டத்தில் வைத்து தாம பெற்றெடுத்த ஒருநாள் வயது நிரம்பிய பச்சிளம பெண் குழந்தையை இப்பெண் வெட்டிக் கொலை செய்ததாக இந்த வழக்கில் குற்றம சுமத்தப்பட்டுள்ளது—

கண்டி மேல் நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது—

கொலைக் குற்றத்தை எதிரி ஒப்புக் கொண்டதன் பேரில் நீதிபதி திரு ஆர் பீ ரணராஜா ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப் பட்ட சிறையையும 1000 ரூபா அபராதத்தையும விதித்தார்—

[இ—017]

## இந்துமத ஆங்கில பேருரை

கொழும்பு, மார்ச்— 14

இந்துசமய, இந்து கலாசார திணைக்களம நடத்தும ஆங்கில இந்து மதப் பேருரைத் தொடரின் 10ஆவது தொடர் "ஸ்ரீ அரவிந்தரின் பூரண யோகம" என்ற தொனிப் பொருளில் நடத்தப்படும—

திரு வி முருகேசு சொலிசிட்டர் சட்டத்தரணி எதிர்வரும சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு (17-3-90) கொழும்பு வக்ஷோல் வீதியிலமைந்துள்ள இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபன (14ஆவது மாடி) கேட்போர் கூடத்தில் இவ் உரையை நிகழ்த்தவுள்ளார்—

இந் நிகழ்ச்சிக்கு லண்டன் கல்லூரியின் பொருளியல், அரசியல், விஞ்ஞானத்துறை பேராசிரியரும முன்னாள் ஐக்கிய இராச்சியத்தின் ஆசிய பசுபிக் மாவட் ...


## இன்றைய திரைகளில்

7 வது வாரம

கெப்பிட்டல்

(கொழும்பு)

2-30. 6-00. 9-30

விடோ

(...)

கான முறைப்பாடுகள் கிடைத்தன-

இந்த முறைப்பாடுகளை மீள் பரிசீலனை செய்தமையினாலும் இப் பகுதிகளில் நிலவிய வேறு பிரச்சினைகளினாலும் இந்த ஆசிரியர் நியமனங்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் திரு ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்தார்-

[ந—வ]

## யாழ். மாவட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த எச்சரிக்கையை யாழ் மாவட்ட நிறுவை, அளவைப் பகுதி பொறுப்பதிகாரி திரு கே நாகலிங்கம் விடுத்திருக்கிறார்-

இதுகாலவரையும் யாழ் மாவட்டத்தில் தங்கம் மற்றும் வெள்ளி நகை வர்த்தகம் பழைய பவுண், மஞ்சாடி அளவை முறையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது-

[ந—நு—142]


**தினபதி**

**சிறு விளம்பரம்**

காணி விற்பனைக்கு

கடுகஸ்தொட்டை முஸ்லிம் சூழலில் பெரிய தபால் கந்தோர் அருகே பிரதான பாதை அருகே நீர், மின்சாரம் சகல வசதிகளும் உடைய $19\frac{1}{2}$ பேர்சஸ் காணி உடன் விற்பனைக்குண்டு. பர்ச்சஸ் விலை 19,500 ரூபா- தொடர்பு கொள்ளவும்- டாக்டர் மொஹிடீன், மொடர்ன் கிளினிக், மடவளை பஸார்-

031694


தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள் அமைவிடங்கள் சட்டவரைவு மீதான விவாதத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது-

கலாசார முக்கோணப் பிரதேசத்தை ஏன் கலாசார நாற்கோணப் பிரதேசமாக மாற்றக் கூடாது-

இலங்கையில் சிங்கள, பௌத்த மக்கள் வாழ்ந்த பாரம்பரிய சகல இடங்களையும் இப்பிரதேசத்தினுள் சேர்க்க வேண்டும்-

சில இடங்களில் தோண்டினால் (அகழ்வு செய்தால்) பல பொருட்களை என்று கூறப்படுகின்றது- இங்கு புதைந்து கிடக்கும் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும்-

கலாசாரத்துறையில் வவுனியா பொலன்னறுவை, அநுராதபுரம் எல்லாம் ஒரே பிரதேசத்தினுள் அடங்குகிறது-

உண்மையை நாம் கண்டு பிடித்து சர்வதேச ரீதியில் விளங்கப்படுத்த வேண்டும்-

நயினாதீவு புனித பிரதேசத்தைக் கவனிக்காமல் இருக்கிறோம்- அது அழிந்து ஒழிந்து கொண்டிருக்கிறது-

இவ்வாறு ஆனந்த தசநாயக்க கூறினார்-

(இ—கு)

## பாகிஸ்தானு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராஜ்ய சபையில் சிறப்பு விவாதம் நடைபெற்றது.

தேநீர் இடை வேளையை ரத்து செய்து விட்டு இந்த விவாதத்தை நடத்துமாறு இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அரச தரப்பினர் முழு மனதோடு அதற்கு இணங்கினர், விவாதம் நடந்தது, உள்துறை அமைச்சர் ஜனாப முப்தி முகம்மது ஸயீது பேசுகையில் காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிட்டு வருகிறது என்று கண்டித்தார்,

காஷ்மீரில் உள்ள தீவிரவாதிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் உதவியும் வழங்கி வருகிறது- ஆயுதங்களும் வழங்கப்படுகின்றன- இவற்றிற்கெல்லாம் ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன-

இதை இந்தியா சகித்துக் கொண்டு இருக்காது- காஷ்மீர் விஷயத்தில் எந்த விதத்திலும் தலையிடுவதை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று ஜனாப் முப்தி முகம்மது ஸயீது எச்சரிக்கை விடுத்தார்-

நேற்று முன்தினம் இந்திய நாடாளுமன்றத்தின் மக்கள் அவையான லோக சபையிலும் காஷ்மீர் விவகாரம் தொடர்பான சிறப்பு விவாதம் ஒன்று நடைபெற்றது-

தேநீர் இடைவேளையை ரத்துச் செய்து விட்டு இந்த விவாதத்தை நடத்துமாறு எதிர்க்கட்சியினர் லோக சபை சபாநாயகரை கேட்டுக் கொண்டனர்-

சபாநாயகர் இந்த கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்தார்-

அதனையடுத்து இந்திய உள்துறை அமைச்சர் ஜனாப் முப்தி முஹம்மது ஸயீத் அங்கே இந்தச் சிறப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்-

அதற்கு முன்னர் இந்திய ரயில்வே பட்ஜட் கூட்டத்தொடரை ஜனாதிபதி வெங்கட்ராமன் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அவரும் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக எச்சரிக்கை விடுக்கும் பாணியில் பாகிஸ்தான் மீது குற்றஞ் சுமத்தி கண்டனம் தெரிவித்தார்-

(உ—வ)

ஜனாதிபதி சட்டத்தரணியான திரு சொக்ஸி நிலையியற் கட்டளை தொடர்பான சட்ட நுணுக்கங்களை விரிவாக ஆராய்ந்தார்-

நாட... ஆவது நிலையியற் கட்டளையின்படி மதிய உணவு ... போது (12 முதல் ... வரை) சபை அமர்வுகள் இடம்பெற முடியாது- அதற்கு இடமும் இல்லை-

இந்தச் சந்தர்ப்பத்தில் நிறைவேற்றப்பட்ட எந்த விடயமும் செல்லுபடியாகாது- எனவே நேற்றைய நிகழ்ச்சிகள் செல்லுபடியாகாது எனத் தீர்ப்பளிக்க வேண்டும் என திரு சொக்ஸி கூறினார்-

இதற்கு பதிலடி கொடுப்பது போல் நிமல் சிறிபால டி சில்வா நிலையியற் கட்டளை 84/12 பிரிவை மேற்கோள் காட்டிப் பேசினார்-

இப்படியான ஒழுங்குப் பிரச்சினை உரிய நேரத்தில் எழுப்பப்பட வேண்டும்-

இடைவேளையின் போதோ அல்லது மாலை அமர்வு நேரத்திற்குப் பின்னரோ சபை நிகழ்ச்சிகள் தொடர இடமுண்டு-

இப்பொழுது அதனை ஆட்சேபித்தால் கடந்த பெப்ரவரி மாதம் மாலை 7-20 மணிவரை சபை நீடிக்கப்பட்டு அவசர காலச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதே? அவசரகாலச் சட்டமும் செல்லுபடியாகாது என்று உத்தர...

## இடிக்கு ஒருவர் பலி

## நால்வர் காயம்

இடி விழுந்ததால் வயல் வேலையில் ஈடுபட்டிருந்த ஒருவர் கொல்லப்பட்டார்- மேலும் நால்வர் படுகாயமடைந்தனர்-

மொரவெவ பகுதியில் இப் பரிதாப சம்பவம் நடந்தது-

மூன்று குழந்தைகளுக்கு தந்தையான ஜீ பியரட்ன (32 வயது) என்பவரே மரணமுற்றார்-

2ந—ர)

...இப்போது ...ள்ளதும் மட்டும் என்று ஒரு வாதம் தேவைதானா? இதனை பெரிதுபடுத்தாமல் சமரசமாக முடித்துக் கொள்வோம் என்றார் ராஜாங்க அமைச்சர் திரு ஏ ஜே ரணசிங்க-

ஜனாதிபதியின் கீழ் உள்ள அமைச்சு விவாதத்தின் போது அரசு தோல்வி கண்டு விட்டதே என்பதே ஆளும் கட்சியினருக்கு பீதியை ஏற்படுத்தி விட்டது என்று திரு அத்தாவுட செனவிரத்ன கூறினார்-

நாடாளுமன்றம் பல்வேறு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டுள்ளது- பகல் போசன இடைவேளையின் போது மட்டுமல்ல- இரவு 7-30 மணிவரை கூட சபை அமர்வுகள் நீடிக்கப்பட்டுள்ளன-

இப்பொழுது அரசு தோல்வி கண்டு விட்டது என்பதால் மட்டும் அது செல்லுபடியாகாதது என்று விவாதம் புரிவது வேடிக்கையானது என்று மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு தினேஷ் குணவர்த்தனா கண்டனம் தெரிவித்தார்-

ஆட்சேபனைகள் உரிய நேரத்தில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும்- காலம் கடந்து ஆட்சேபிப்பது அர்த்தமற்றது என்று சுட்டிக் காட்டினார் முன்னாள் சபாநாயகரான திரு ஸ்டான்லி திலகரட்ன,

இரு தரப்பினரினதும் வாதப் பிரதிவாதங்களை அவதானித்த சபாநாயகர் இது தொடர்பான தீர்ப்பை சிறிது நேரத்தில் கூறுவதாக சொல்லி பௌத்த சாசன நிதியம் தொடர்பான விவாதத்தை ஒத்தி வைத்தார்-

இவ்விடயம் தொடர்பாக பரிசீலனை செய்வதற்கு அவர் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினார்-

தொடர்ந்து தேயிலை சபைகள் கட்டளைச் சட்டம் தொடர்பான விவாதம் நடைபெற்றது-

[ந—ய]

யரும் முன்னாள் ஐக்கிய இராச்சியத்தின் ஆசிய பசுபிக் மாவட்டப் பணிப்பாளருமான திரு சி சூரியகுமாரன் தலைமை வகிப்பார்-

இந்து சமய, இந்து கலாசார, தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் இவ் வைபவத்தில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்வார்-

(இ)

## பட்டதாரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1982 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது இவர் ஜே வி பி முன்னாள் தலைவர் ரோஹண விஜேவீரவுக்கு ஆதரவு தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார் என்றும் தெரியவந்துள்ளது-

தெனியாய பகுதியில் இருந்து தலைமறைவாகிய இவர் மீகொட பகுதியில் கொள்ளைக் கோஷ்டி ஒன்றுக்கு தலைமை வகித்து செயற்பட்டு வந்துள்ளார்

(ந—ர)

## சபாநாயகர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாயகர் அல்ஹாஜ் எம், எச், முகம்மது கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவித்தார்.

இந்தத் தகவலை மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு தினேஷ் குணவர்த்தன தினபதிக்குத் தெரிவித்தார்.

தாம் தீர்ப்பை வழங்கும் வரை சட்டவரைவு மீதான விவாதத்தை இடை நிறுத்தி வைத்துள்ளதாகவும் சபாநாயகர் கூறினார் என்று திரு தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

(உ—வ)


லிடோ

(யாழ்நகர்)

10-30, 2-00, 6-00

பிரபு - அமலா

சிறுவன் மீனுராஜ் நடித்த

**பூ...**

**பூவா**

**பூத்திருக்கு**

(கலர்)

13 வது வாரம்

ராஜா

(யாழ்நகர்)

10-30, 2-30, 6-00

செல்லமஹால்

(கொழும்பு)

2-30, 6-00, 9-30

ரஜனிகாந்த்

(இரட்டை வேடம்)

ராதா - நதியா

நடித்த

**ராஜாதி ராஜா**

(கலர்)

14 வது வாரம்

ஜெஸிமா

(கிராண்ட்பாஸ்)

2-30, 6-00, 9-30

வெலிங்டன்

(யாழ்நகர்)

10-30, 2-30, 6-30

துசித

(பொரலஸ்கமுவ)

10-15, 1-15, 3-30

கார்த்திக் — குஷ்பு

வி .கே. ராமசாமி

நடித்த

**வருஷம் 16**

(கலர்)

# தமிழக அரசின் விருது பெற்ற ஸ்டண்ட் மாஸ்டர் தாஸ்

வில்லுக்கு விஜயன், சொல்லுக்கு ஆசைத்தம்பியின் கவிதை நடை வாசனைக்கு கம்பன் என்பது போல கராத்தே தப்பினால் மரணம் என சொல்லத் தகுந்த துறைப்பட ஸ்டண்ட் கலைக்கு ஒருவராக திகழ்பவர் திருவாரூர் தாஸ் (எம் எஸ் தாஸ்)—

தொழில்நுட்ப கலைஞர்களில் ஏற்றவர்களை தேர்ந்தெடுத்து முதல் முதலாக தமிழக அரசு விருது வழங்குகிறது. இதில் சிறந்த ஸ்டண்ட் இயக்குநருக்கு உரிய விருதினைப் பெறுபவர் இவர்.

இவருடைய முன்னேற்றம் கோபுரத்தின் அடியில் நிற்பவன் திடீர் என்று உச்சிக்குத் தாவுவது போல காட்டப்படும் தந்திர வேலை அல்ல.

40 ஆண்டுகள் கடுமையான உழைப்பு, பலவித ஸ்டண்ட் பயிற்சி. படிப்படியாக ஏறி உச்சிக்கு வந்த முன்னேற்றம்.

தமிழக அரசின் விருது பெறும் கடிதம் கிடைத்ததும் எம் எஸ் தாஸ் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆனந்தக் கண்ணீர் கசிய காகிதம் எடுத்து தமிழக முதல்வருக்கு தனது நன்றியைத் தெரிவித்து கடிதம் எழுதினார்.

அவர் கையினால் விருது பெறும் மகிழ்ச்சியை முத்து முத்தாக செந்தமிழில் தீட்டி அந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தை எமது நிருபரிடம் படித்துக் காட்டியவர் திரை உலகில் தனது வளர்ச்சி பற்றி ரத்தினச் சுருக்கமாகக் கூறினார்.

தஞ்சை மாவட்டம் திருவாரூர் எனது ஊர், சிறு வயதிலேயே கிராமத்து முக்கிய விளையாட்டான சிலம்ப பயிற்சி பெற்றேன். அதிலும் குத்து வரிசை போன்ற 5 6 வகைப் பயிற்சி, கத்திச் சண்டை, "ஜிம்னாஸ்டிக்" போன்ற பல வகைப் பயிற்சியும் பெற்ற பின்பு சென்னை வந்தேன்.

வந்ததும் எனது திரை உலக பிரவேசம் எப்படி இருந்தது தெரியுமா?

நான் ஒரு நடனக் குழுவில் நடனமாடும் நடனக் கலைஞராக!

நடனமாடிய எனக்கு கள்ளபார்ட் நடராஜனுக்கு "டூப்" போட்டு நடிக்கும் ஒரு வாய்ப்பு எதிர்பாராமல் வர அன்று முதல் நான் ஏற்ற ஸ்டண்ட் பயிற்சி கை கொடுக்கத் தொடங்கியது.

மறைந்த சிட்டாடல் ஜோசப் தளியத் என்னை முதல் முதலில் திரைப்பட ஸ்டண்ட் மாஸ்டர் ஆக்கினார், இன்று இந்தியாவின் முக்கிய மொழிப் படங்களில் ஒரியா மொழிப் படங்கள் தவிர அனைத்துக்கும் ஸ்டண்ட் அமைத்து விட்டேன்.

பாடலோடு வரும் காட்சிகளுக்கு முதல் முறையாக ஸ்டண்ட் அமைக்கும் வாய்ப்பு பெற்றவன்— கவியரசு கண்ணதாசன் எழுதிய "நான் போட்டால் தெரியும் போடு தமிழ் பாட்டால் அடிப்பேன் ஓடு" என்று ரவிச்சந்திரன் நடித்து இடம் பெற்ற பத்மினி பிக்சர்ஸ் "எங்க பாப்பா" படத்தில் இடம் பெற்ற பாடலுக்கு,

ராமண்ணாவின் "குமரிப் பெண்" படத்துக்கு ஸ்டண்ட் அமைத்ததன் மூலம் அந்தப் படம் இந்தியில் தயாரான போது அங்கும் முதல் முறையாகச் செல்லும் பேறு பெற்றேன்,

ஒரு தமிழ் ஸ்டண்ட் மாஸ்டர் இந்திப் படத்துக்கு ஸ்டண்ட் அமைப்பதற்கு பலத்த எதிர்ப்பு,

அங்கு உள்ள ஸ்டண்ட் மாஸ்டர்கள் 3 நாள் வேலை நிறுத்தம் கூடச் செய்தனர்.

ராஜ்கபூர் சுனில்தத் தர்மேந்திரா, நர்கீஸ் போன்றவர்கள் முன் நின்று அவர்களைச் சமாதானம் செய்து என்னை ஸ்டண்ட் அமைக்க வழி வகுத்தனர், அவர்களை மறக்க முடியுமா?

எம் ஜி ஆர் சிவாஜி, என் டி ராமராவ், நாகேஸ்வரராவ், ராஜ்குமார், அமிதாப்பச்சன், ரஜனி, கமல் என இந்தியாவின் அனைத்து முன்னணி நட்சத்திரங்களுக்கும் ஸ்டண்ட் பணி புரிந்துள்ளேன்.

உலகப் புகழ்பெற்ற வங்காள டைரக்டர் சத்யஜித்ரே படம் ஒன்றுக்கு ஸ்டண்ட் அமைத்து அவர் பாராட்டுப் பெற்றேன்.

ரஜனி நடித்த "பிளட் ஸ்டோன்" ஆங்கிலப் படத்துக்கு ஸ்டண்ட் அமைத்தது நான் பெற்ற பேறுகளில் ஒன்று!

கலிபோர்னியாவில் 50 உலகப் புகழ் பெற்ற ஸ்டண்ட் மாஸ்டர்கள் கலந்து பேசி அந்த வாய்ப்பை எனக்கு அளித்தனர்.

இன்றைய புகழ் பெற்ற சூப்பர் சுப்பராயன், ராமபோ ராஜ்குமார் ஹார்ஸ்பாடி போன்ற 24 பேர் எனது சிஷ்யர்கள் என்பதில் மிகுந்த பூரிப்பு அடைகிறேன்.


400 படங்களுக்கு ஸ்டண்ட் அமைத்திருக்கிறேன், "ஸ்டண்ட்" டுடன் கதை திரைக்கதை ஒளிப்பதிவு, எடிட்டிங் ஏன் டைரக்ஷன் கூட அனுபவம் உண்டு.

கடவுள் அதற்கும் கண் திறந்து காலம் கனிய வைத்தால் டைரக்ஷன் துறைக்கு வருவேன், விடா முயற்சி என்றும் பலன் தரும்,

இவ்வாறு கூறினார் திருவாரூர் தாஸ், (ந—பி)



தாஸ்



எங்கள் ஜோடிப் பொருத்தம் எப்படி என்று படப்பிடிப்பாளரைப் பார்த்து ஓரக் கண்ணால் கேட்பவர் சீதா, (முரளி — சீதா, படம்— வெற்றி மாலை)

# பதுளை, மொனராகலை; 366 பாலர் பாடசாலைகள்

## ஊவா மா.சபை நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 14

பதுளை — மொனராகலை ஆகிய மாவட்டங்களில் புதிதாக 366 பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்—

ஊவா மாகாண சபையில் சமூக சேவைகள் — கிராம அபிவிருத்தி — மகளிர் விவகார காணி அமைச்சு இதற்கான முடிவை எடுத்திருக்கிறது—

இத்திட்டத்தின் கீழ் பதுளை மாவட்ட கிராம சேவகர் பிரிவுகளில் 239 பாலர் பாடசாலைகளும் — மொனராகலை கிராம சேவகர் பிரிவுகளில் 127 பாலர் பாடசாலைகளும் அமைக்கப்படும்—

இதனால் இப்பகுதியில் வேலை வாய்ப்பற்ற 366 யுவதிகளுக்கு ஆசிரியைகளாக வேலை வாய்ப்பு கிடைக்கும்—

இவ்வாறு தெரிவு செய்யப்படும் யுவதிகளுக்கு பாலர் பாடசாலை தொடர்பாக ஆரம்ப பயிற்சியும் வழங்கப்படும்—

ஊவா மாகாண சபையின் சமூக சேவைகள் — கிராம அபிவிருத்தி — மகளிர் விவகார — காணி அமைச்சர் திரு ஆர் எம் ரத்நாயக்கா இத்தகவலை தெரிவித்தார்— (ந—வ)

## அரிசியின் விலை வீழ்ச்சி

நாத்தாண்டி, மார்ச் 13

அரிசியின் விலை இப் பிரதேசத்தில் வெகுவாகக் குறைந்துள்ளது— முன்பு 15 ரூபாவுக்கு விற்கப்பட்ட நாட்டரிசி ஒரு கிலோ இப்பொழுது 10 ரூபாவுக்கு விற்கப்படுகிறது— 18 ரூபா வரை விற்கப்பட்ட ஒரு கிலோ சம்பா 13 வரை விற்கப்படுகிறது—

இப் பிரதேசத்தில் பல இடங்களிலும் தற்பொழுது வேளாண்மை அறுவடை செய்யப்பட்டு வருகிறது— இம்முறை வேளாண்மை நல்ல விளைச்சலையும் கொடுத்துள்ளது— [ஐ—225]

## கிராமப்புற மாணவர்களின் குறைகள் நீக்கப்பட வேண்டும்

—ஏ. எம். யூசுப்

கொழும்பு, மார்ச் 14

கிராமப்புற மாணவர்கள் கல்வித் துறையில் எதிர்நோக்கும் குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும்—

மேல் மாகாண, உணவு, கூட்டுறவு, கைத்தொழில், கடற்றொழில் சமூக சேவைகள் அமைச்சர் ஜனாப் ஏ எம் யூசுப் இவ்வாறு கூறினார்—

பேருவளை நகர எழுச்சி, கிராம எழுச்சி திட்டத்தின் கீழ், அளுத்கமை, களுவாமோதர கனிஷ்ட வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய இரு மாடிக் கட்டிடத்தைத் திறந்து வைத்த பின்பு நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றினார்—

களுவாமோதர கந்த விகாராதிபதியினால் 7 லட்சம் ரூபா செலவில் இக் கட்டிடம் அமைக்கப்பட்டது—

கல்வி, கலாசார தகவல் அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம் லொக்கு பண்டார இக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்—

அமைச்சர் யூசுப் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது—

கிராமப் புறங்களில் வாழும் மாணவர்கள் எதிர்நோக்கும் கல்விக் குறைபாடுகள் நீக்கப்படுவதன் மூலம் அவர்கள் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியும்—

கிராமப்புற மாணவர்களும் நல்ல முறையில் கற்று முன்னேற வேண்டும்—

அந்த வகையிலேயே இன்றைய அரசாங்கம் செயல்பட்டு வருகிறது—

ஒரு நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு கல்வித் துறையில் அபிவிருத்தி தேவை—

இப்பகுதி மாணவர்களின் கல்வி நலன் கருதி தனது சொந்தச் செலவில் இக் கட்டிடத்தை அமைத்த கந்தவிகாராதிபதி பாராட்டுக்குரியவர்—

இவரின் முன்மாதிரியை ஏனையோரும் பின்பற்ற வேண்டும் என்றார்—

மேல் மாகாண கல்வி, இளைஞர், மாதர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் திரு சுரனிமல ராஜபக்ஷ, கல்வி அமைச்சின் செயலாளர் கேர்ணல் வி எஸ் குடலிகம, வீடமைப்பு நிர்மாண அமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் ஜனாப் ஹலீம் ஏ அஸீஸ் உட்பட பலரும் விழாவில் கலந்து கொண்டனர்— (ந—007)

## இலவச ஆங்கில வகுப்புகள்

மடவளை, மார்ச் 13

ஹாரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியில் பல இடங்களில் "யுனெஸ்கோ" அமைப்பின் உதவியுடன் இலவச ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றன—

## உயர் கல்வி சிபார்சுகள்

## களனி பல்கலை: உபகுழு ஆராயும்

கொழும்பு, மார்ச் 14

இளைஞர் விரக்தி பற்றி ஆராய்ந்த ஆணைக்குழு உயர் கல்வி தொடர்பாக தெரிவித்த சிபார்சுகளை ஆராய்வதற்காக களனி பல்கலைக்கழக செனட் சபை ஓர் உப குழுவை நியமித்து உள்ளது—

அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பொருத்தம் அற்ற சிபார்சுகளுக்கு மாற்று சிபார்சுகளைச் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டு உள்ளது—

இவ்வாறு பல்கலைக்கழக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்—

1986, 1987 ஆம் கற்கை ஆண்டுகளின் மாணவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதியில் இருந்து பல்கலைக்கழகத்துக்குச் சேர்க்கப்படுவர்—

1987, 1988 ஆம் ஆண்டுகளின் மாணவர்கள் மே மாதத்தில் களனி பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்படுவர்—

இவ்வாறு அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்— (ந—007)

## விகிதாசார முறையினால் பிரதிநிதித்துவம் இழந்த

## புத்தளம் தொகுதிக்கு முஸ்லிம் எம்.பியை நியமிக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் மகஜர் சமர்ப்பிக்கப்படும்

புத்தளம், மார்ச் 13

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இருந்து வந்த புத்தளம் தொகுதிக்கான பிரதிநிதித்துவம் விகிதாசார பிரதிநிதித்துவ முறையினால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது— எனவே புத்தளம் தொகுதிக்கு ஒரு முஸ்லிம் ...

...த்து பல கோரிக்கைகள் அடங்கிய மேற்படி மகஜரை சமர்ப்பிக்கும்—

மாகாண சபை உறுப்பினர் டாக்டர் ஐ எம் இல்யாஸ் (ஸ்ரீ ல மு கா) தலைமையில் இத் தூதுக்குழு இயங்கும்—

இம் மகஜரில் மேலும் கூறப் ...

...களில் ஒரு முஸ்லிம் நாடாளுமன்ற அங்கத்தவரேனும் கிடையாது—

விகிதாசார பிரதிநிதித்துவம் மூலம் இனி மேலும் புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம் எம் பி ஒருவரேனும் வர முடியாது—

முதல நான் ஏற்ற ஸ்டண்ட பயிற்சி கை கொடுக்கத் தொடங கியது.

மறைந்த சிட்டாடல் ஜோசப் தளியத் என்னை முதல் முதலில் திரைப்பட ஸ்டண்ட், மாஸ்டர் ஆக்கினார், இன்று இந்தியாவின் முக்கிய மொழிப் படஙகளில்



எஙகள் ஜோடிப் பொருத்தம எப்படி என்ற படப்பிடிப்பாள ரைப் பார்த்து ஒரக் கண்ணால் கேட்பவர் சீதா, (முரளி – சீதா, படம– வெற்றி மாலை)

மடவளை, மர்ச் 13

ஹாஸ்புத்துவ தேர்தல் தொகுதியில் பல இடஙகளில் "யுனெஸ்கோ" அமைப்பின் உதவியுடன் இலவச ஆஙகில வகுப்புகள் நடத்தப்படுகின் றன–

மேற்படி இலவச ஆஙகில வகுப்புகளை நடத்துவது தொடர் பான ஒழுஙகுகளை மத்திய மாகாண சபை வர்த்தக சுகா தார விளையாட்டுத்துறை கூட் பிறவு உல்லாசப் பயணத்துறை அமைச்சர் ஜனாப் எம எச் எம ஹலீம மேற்கொண்டுள்ளதா கத் தெரிகிறது–

நாளை 16 ஆம திகதி அக்கு றணை மத்திய கல்லூரியில் ஒரு வகுப்பு ஆரம்பமாக உள்ளது–

இதில் விருமபிய எவரும பஙகுபற்றலாம– வார இறுதி தினஙகளில் இவ்வகுப்புகள் நடை பெறும–

[ஐ—431]

கடந்த 40 வருடஙகளுக்கு மேலாக இருந்து வந்த புத்த ளம தொகுதிக்கான பிரதிநிதித் தவம விகிதாசார பிரதிநிதித் தவ முறையினால் நிர்மூலமாக் கப்பட்டுள்ளது– எனவே புத்த ளம தொகுதிக்கு ஒரு முஸ்லிம நாடாளுமன்ற அஙகத்தவரை ஜனாதிபதி நியமனம செய்ய வேண்டும–

இவ்வாறு கோரும மகஜர் ஒன்று ஜனாதிபதியிடம சமர்ப்பிக் கப்பட உள்ளது–

ஜனாதிபதியின் மூன்றாவது நட மாடும சேவை நாளை 16 ஆம திகதி புத்தளம நகரில் நடை பெறவுள்ளது–

இந்த சேவை அமர்வின் போதே மேற்படி மகஜர் ஜனா திபதியிடம சமர்ப்பிக்கப்படவுள் ளது–

ஸ்ரீலஙகா முஸ்லிம காஙகிர ஸின் புத்தளம கிளையின் தூதுக் குழு ஒன்று ஜனாதிபதியை சந்தி

...கிய மேற்படி மகஜரை சமர்ப் பிக்கும–

மாகாண சபை உறுப்பினர் டாக்டர் ஐ எம இல்யாஸ் (ஸ்ரீ ல மு கா) தலைமையில் இத் தூதுக்குழு இயஙகும–

இம மகஜரில் மேலும கூறப் பட்டுள்ளதாவது—

போட்டியின்றியே ஒரு எம பியை அனுப்பி வைத்த புத்தளம தொகுதி இன்று நாடாளுமன்ற பிரதிநிதித்துவம இன்றி தவிக்கி றது–

வடமேல் மாகாணத்திலுள்ள குருநாகல், புத்தளம மாவட்டங ...ளில் ஒரு முஸ்லிம நாடாளு மன்ற அஙகத்தவரேனும கிடை யாது–

விகிதாசார பிரதிநிதித்துவம மூலம இனி மேலும புத்தளம மாவட்டத்தில் முஸ்லிம எம பி ஒருவரேனும வர முடியாது–

எனவே சிறுபான்மை முஸ்லிம மக்களின் நன்மை கருதி ஜனாதி பதி நலனில் அக்கறை கொண்டு ஒரு முஸ்லிம நாடாளுமன்ற அங கத்தவரை (அவர் எக்கட்சியை சேர்ந்தவராக இருந்தாலும சரி) நியமனம செய்யுமாறு வேண்டு கிறோம என கூறப்பட்டுள்ளது–

[ந—241]

# நிரோஷாவுக்காக ராம்கி ரவுடிகளுடன் மோதினார்

மனிதவாடையே இல்லாத மலையடிவாரத்தில் குடிசை போட்டு வாழ்ந்து வந்தார் சிவ குமார், அவரிடம அனாதை களாக வந்து அடைக்கலம புகுந்தார்கள் ராமகி, நிரோஷா,

இருவர் மீதும சிவகுமார் அன்பு காட்டி அரவணைத்து வந் தார்,

ராமகி நிரோஷா இருவரும ஒருவரையொருவர் நேசித்தனர்.

இவர்களின் பாசத்தையும பழகும விதத்தையும பற்றி பக் கத்து கிராமவாசிகள் அவதூ றாகப் பேசினார்கள்.

ரவுடிகள் சிலர் கிண்டல் செய்தனர்.

இதனால் ரௌடிகளுக்கும ராமகிக்கும இடையே பயஙகர மோதல் ஏற்பட்டது– ரவுடி களை ராமகி பந்தாடினார்.

இப்படி ஒரு காட்சி எவ ரெஸட் பிலிமசின் "மனிதஜாதி" படத்துக்காக படமாக்கப்பட் டது,

இந்தச் சண்டைக் காட்சி பட மாகிக் கொண்டிருந்தபோது, ஏற்கனவே முறிவு ஏற்பட்டி ருந்த ராமகியின் காலில் மீண்டும முறிவு ஏற்பட்டது, உடனடியாக அவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார்,

மற்றும, பாண்டியன், ஜெய் கணேஷ் எஸ் எஸ் சந்திரன் செந்தில், வெண்ணிற ஆடை மூர்த்தி, எம எல் ஏ மல்லையா, சத்யப்பிரியா காந்திமதி கோவை சரளா ஆகியோரும நடிக்கிறார் கள்.

இளையராஜா இசை அமைக்க பி ஆர் விஜயலட்சுமி ஒளிப் பதிவு செய்கிறார்,

கதை திரைக்கதை வசனம எழுதி டைரக்ட் செய்கிறார் கலைமணி,

தயாரிப்பு மேற்பார்வை வீரையா, இணை தயாரிப்பு ஏ எஸ் ஏ சமத்,

(ந–10)

# 'பொம்பள மனசு' முடிவடையும் நிலையில்

சசியாலயா நிறுவனம தயாரிக் கும "பொமபள மனசு" என்ற படத்தின் படப்பிடிப்பு தொடர் ந்து நடைபெற்று வருகிறது,

இந்தப் படத்தில் சந்திரசேகர் கதாநாயகனாக நடிக்க, கதா நாயகியாக "கோடைமழை" படத்தின் மூலம அறிமுகமான வித்யா நடிக்கிறார்,

ரகுவரன், ரஞ்சனி, செந்தில், செந்தாமரை, நாசர், ராகவேந் திரா, காந்திமதி, கோவை சரளா ஆகியோரும நடிக்கிறார் கள்.

ரத்னசூரியன் இசை அமைக்க, நாகராஜ் ஒளிப்பதிவு செய்ய, பாலபாரதி வசனம எழுது கிறார். விஜயபாரதி கதை திரைக்கதை எழுதி, டைரக்ட் செய்ய, ஆரோக்கியசாமி, ராஜ் ஷெரீப் இணைந்து தயாரிக்கிறார் கள்.

"பொமபள மனசு" படத்தின் வெளிப்புறக் காட்சிகள் ஈச்சம பாக்கம, திருவடந்தை, மகாபலி புரம பகுதிகளில் படமாக்கப்பட் டன.

முடிவடையும கட்டத்தை நெருஙகியுள்ள படம "பொம பள மனசு"

(ந–10)

தினபதி சினிமா

# வெளிநாட்டு தொழில் பெறுவோருக்கு ஆலோசனை, வழிகாட்டல்

## இளைஞர் விவகார அமைச்சு ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 14

வெளிநாட்டில் தொழில் பெற விருமபுவோரையும, வெளிநாட்டுத் தொழில்கள் பற்றி பயிற்சி பெற விருமபு வோரையும ஊக்குவிக்கும முகமாக "ஆலோசனை, வழி காட்டல் சேவை திட்ட மிடல் அமைப்பு" ஒன்று உரு வாக்கப்படும–

இளைஞர் விவகார, விளை யாட்டு அமைச்சு இதற்கு நட வடிக்கை எடுத்துள்ளது–

இத்திட்டத்தின் பிரகாரம தொழில் நுட்பப் பயிற்சி, சுய தொழில் திட்டஙகள், தனியார் துறை தொழில், வெளிநாட்டுத் தொழில், அரச துறை தொழில் என்று ஐந்து பிரிவுகளின் கீழ் இந்த அமைப்பு செயற்படும–

புத்தளத்தில் ஜனாதிபதி நட மாடும அலுவலக சேவையின் போது இத்திட்டம நடை முறைப்படுத்தப்படும–

(ந-007)


# தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் – இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்



எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.

217. ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11.
தொலைபேசி- 23981—84

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு

தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

— 1990 மார்ச் 15 —
சுடர் 18 கதிர் 4433

# மனித மேம்பாட்டினை பிள்ளைகள் உணரட்டும்

## பகவான் சாயிபாபாவின் கல்வி நெறி நற்பயன் தரும்

— நா. புவனேந்திரன் —

விஞ்ஞான யுகத்தின் உச்சக் கட்டத்தில் நாம இன்று வாழ்கிறோம். எல்லாத் துறைகளிலுமே விஞ்ஞான அபிவிருத்தி, தன் செல்வாக்கைச் செலுத்தி, ஆக்ரமித்து நிற்கின்றது.

தொழில் நுட்ப வளர்ச்சி வியக்குமளவிற்கு வளர்ந்து எமக்கெல்லாம மிக, இலகுவான வாழ்க்கை வசதிகளை வழங்கிக் கொண்டு இருக்கிறது.

கற்பனை செய்ய முடியாத அளவிற்கு இன்று உலகம எல்லாத் துறைகளிலுமே விரிவான பாரிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளது.

ஆனால் இத்தனை இருந்தும். மனிதன் மன நிம்மதியுடனும், மனச்சாந்தியுடனும வாழ முடியவில்லை.

மனிதனின் மன அமைதி நிம்மதி படிப்படியாக அழிந்து கொண்டே போகின்றது.

இவ்வுலகில் இலாபத்தை வளர்க்கவும், அதிகார பலத்தைப் பெருக்கவும வேண்டிய வழி முறைகளைக் கண்டறிவதில் மாத்திரமே இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சிகள் பெரிதும உதவின.

மனிதனை மனிதனாக வாழ்வதற்கு வேண்டிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்க எதுவுமே செய்யப்படவில்லை எனலாம.

இதற்கு முக்கிய காரணம இன்றைய உலகில் மனித மேம்பாட்டுக் குணங்கள் புறக்கணிக்கப்பட்டமையேயாகும.

இன்றைய கல்வி மனிதனது வருவாயைப் பெருக்கும நோக்கத்துடன் கற்பிக்கப்படுவதால் அவனது ஆன்மீகத் துறையில் அதிகம அக்கறை செலுத்தப்பட்டு அவன் வளர்த்தெடுக்கப்படவில்லை.

எனவே தான் இன்று கற்பவை, கசடறக் கற்கப்படுவது மில்லை, பின்னர் அதற்குத் தக நிற்கப்படுவதுமில்லை.

இதனால் இறுதியில் மனிதனது குணவியல் பாதிக்கப்பட்டு அதன் மூலம அவனது ஆளுமையும பூரணமாக வளர்த்தெடுக்கப்படுவதுமில்லை.

இதனால் தான் மனிதன் நிம்மதி, அமைதி இழந்து தவிக்கின்றான்.

நற்பண்பற்ற கல்வி மனிதத் தன்மையற்ற விஞ்ஞானம, கொள்கையற்ற அரசியல், ஒழுக்கமற்ற வாணிபம் என்பன பயனற்றவை.

அது மட்டுமல்ல நிச்சயமாக சமூகத்திற்குத் தீங்கையே விளைவிக்கும. இதற்கு அடிப்படைக் காரணம மனித மேம்பாடுகள் இன்றைய கல்வித் திட்டத்தில் முறைப்படி புகுத்தப்படாமை அல்லது முறைப்படி கல்வி கற்பிக்கப்படாமையேயாகும எனத் திட்டமாகக் கூறலாம.

இத்தகைய சூழ்நிலையில் தான் எமது கலியுக அவதாரம பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபா இம மனித குலத்தை மீட்டெடுக்க மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டத்தை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

அவரது தெய்வீகப் பயணம இவ்வுலகில் ஆரமபித்து இப்போது 50 வருடங்கள் பூர்த்தியாவதால் 1990 ஆம ஆண்டை அவரது அடியார்கள் பொன் விழா ஆண்டாக கொண்டாடுகின்றார்கள்.

மனிதனுக்கு வேண்டிய நற்பண்புகள் 83 என ஆய்வாளர்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த நற்பண்புகள் 83 ஐயும எல்லோரும மிக இலகுவில் விளங்கி, மனதில் பதித்துக் கொள்ளக் கூடியதாக இவற்றை பகவான் 5 பெரும பிரிவுகளாக வகுத்து எமக்கு தந்துள்ளார்.

சத்யம, தர்மம், சாந்தி, பிரேமை அஹிம்சை எனும 5 மனித மேம்பாட்டுக் குணங்களே அவை.

இவ் ஐந்து மேமபாட்டுக் குணங்களையும ஒருவன் பூரணமாகக் கடைப்பிடித்து நடக்கும போது அது அவனுக்கு வேண்டிய எல்லா நற்பண்புகளையும ஒருங்கே அவனிடம மிளிரச் செய்து விடும.

அவனிடம இயல்பாகவே இருக்கும தெய்வீகக் குணங்களை படிப்படியாக வெளிப்படுத்தி, அதன் மூலம அவனிடம இருக்கும மிருகக் குணங்களை சிறிது சிறிதாக அழித்து இல்லாமல் செய்து விடும.

இது தனி மனிதனுக்கு மட்டுமன்றி அவனது குடுமபத்திற்கும மட்டுமன்றி சமுதாய வளர்ச்சிக்கும பயன்பட்டு இறுதியில் இவ்வுலகமே இவ்நற்பண்புகளால் நிரப்பப்பட்டு ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கும.

எனவே இந்த அடிப்படை மனித மேம்பாட்டுக் குணங்களை மாணவர்களிடையே புகுத்துவது மிக இன்றியமையாததாகும.

அறிவின் வேட்கை நிறைவு பெற்று, நிலைத்திடும இடமே சத்யம.

நன்னடத்தையைக் கடைப்பிடித்து இலட்சியத்தை நோக்கி இயங்குதலே தர்மம.

மனித உணர்ச்சிகளின் குழப்பங்கள் நீங்கி, கிளர்ச்சிகளற்ற கலக்கமற்ற அடிப்படையான சம நிலையில் தேங்கி நிற்றலே சாந்தி.

விழிப்புணர்வுடன் நிகழும ஒழுங்கான மன நெகிழ்வின் தன்னலமற்ற சுரப்பே பிரேமை.

உயிர்களுக்கு ஊறு இழைக்காது பிற நலம பேணும மனவிரிவே அஹிம்சை.

— இந்த ஐந்து மனித மேமபாட்டுக் குணங்களையும், மாணவர்களுக்கு அவர்களது சிறு பராயதிலிருந்தே படிமரத் தாணி போல் சிறிது சிறிதாக, மெல்லப் புகுத்த வேண்டும.

## சாயி அமிர்தம்

இம மனித மேம்பாட்டுக் குணங்களின் பயிற்சியால், மனிதனின் பயணம சிறக்கின்றது. வாழ்க்கையின் சூழல் கசப்புக்கள் அழிகின்றன இதனால் அவனது மனச சாந்தியில் பிறக்கும நிறைவு மலர்கின்றது.

இத்தகைய மிக முக்கியத்துவம வாய்ந்த மனித மேமபாட்டுக் கல்வியை ஒரு பிள்ளையின் 6 வயது தொடக்கம 14 வயது வரை உள்ள கால கட்டத்தில் கற்பிப்பது இன்றியமையாதது. (ம)ச

## தெங்குப் பொருள் உற்பத்தி வீழ்ச்சி

அடுத்த இரண்டு மூன்று வருடங்களில் தெங்குப் பொருள் உற்பத்தி வெகுவாகக் குறையும என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தேங்காய் அதிக அளவில் உற்பத்தியானால் தான் தெங்குப் பொருள்களின் உற்பத்தியும அதிகரிக்கும.

தெங்குப் பொருள் உற்பத்தி அதிகரித்தால் தான் அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி சமபாதிக்கலாம.

இன்று தேயிலை – றப்பர் போன்று தெங்குப் பொருள்களும பிரதான ஏற்றுமதிப் பொருள்களாக விளங்குகின்றன.

தெங்குப் பொருள்களில் குறிப்பாக தேங்காய் எண்ணெய் – கொப்பறா – தேங்காய்த் துருவல் – தும்பு ஆகியவை வெளிநாடுகளுக்கு குறிப்பிடத்தக்க அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தேங்காய் உற்பத்தி குறைந்தால் தெங்குப் பொருள் ஏற்றுமதியும அந்நியச் செலாவணிச் சமபாத்தியமும பாதிக்கப்படுவதோடு மற்றொரு நிலையும் ஏற்படும.

உள்ளூர் பாவனைக்கு வேண்டியளவு தேங்காய் கிடைக்காது.

தேங்காய்க்குப் பற்றாக்குறை ஏற்பட்டால் தேங்காய் விலை உயரும. அதிக விலை கொடுத்து தேங்காய் வாங்க எல்லோருக்கும கட்டுபடியாகுமா?

ஏற்கனவே விலைவாசி உயர்வால் கஷ்டப்படும சாதாரண பொதுமக்களுக்கு தேங்காயின் விலையும உயர்ந்தால் அது பெரிய சுமையாகி விடும.

தேங்காய் உற்பத்தி குறையலாம என்று அச்சம தெரிவிக்கப்படுவதற்கான காரணம

மகாபாரதம் இராமாயணம் போன்ற

## இலக்கிய நூல்கள் இன்றைய கற்பித்தலில் கையாளப்படுவதில்லை

— கொத்தணி அதிபர்

சாவகச்சேரி மார்ச் 13

மனித குலத்தின் உயரிய வழிகாட்டிகளான மகா பாரதம, இராமாயணம

பெற்ற இந்தப் புத்தகக் கண்காட்சியில் அவர் மேலும பேசியதாவது.



## பாடவிதானம் தமிழ்மொழிமூலம்

சாவகச்சேரி, மார்ச் 13

தொலைக்கல்வி மூலம பயிற்சி பெறும ஆசிரிய மாணவர்களுக்கான பாட விதானங்களும கடந்த கால வினாப் பத்திரங்களும தமிழ் மொழி மூலம அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அழகியல் பாடங்களான வரைதல், சங்கீதம, சித்திரம ஆகியனவும பௌதிக விஞ்ஞானம உயிரியல் விஞ்ஞானம, உடற் கல்வி போன்ற பாடங்களின் பாட விதானங்களுமே தமிழ்

## செய்தித் திரட்டு

### 75 ஆயிரம் ஏக்கரில் தென்னை

கொழும்பு, மார்ச் 14

குருநாகல் மாவட்டத்தில் 75 ஆயிரம ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை பயிரிடப்படும.

தென்னை அபிவிருத்தி ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

வடமேல் மாகாணத்திலேயே கூடுதலாக தென்னை உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு 5½ லட்சம ஏக்கர் நிலத்தில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. [ஐ—மு]

### கால்நடை வளர்ப்புக்கு கடன உதவி

கோப்பாய், மார்ச் 13

யாழ் மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்துவதற்கு கடன் வசதி வழங்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்பு ஊக்குவிப்புக் கடனாக 5 ஆயிரம ரூபா வீதம கால்நடை வளர்ப்போர் சங்கம மூலம கடனுதவி வழங்கப்படுகின்றது.

அரசாங்க செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கால்நடை வளர்ப்போர் சங்கங்களின் செயற்பாடு மதிப்பீடு செய்யப்பட்டு சிறந்த முறையில் செயற்படும சங்கங்களிற்கு ஊடாக கடன் வசதி வழங்கப்படுகிறது. [ஐ—142]

### ஹதீஸ் மஜ்லிஸ்

கொழும்பு, மார்ச் 14

ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையம பெண்களுக்காக பிரத்தியேகமாக நடத்தும மாதாந்த ஹதீஸ் மஜ்லிஸ் இமமாதம் 17 ஆம திகதி மாலை 4—15 மணிக்கு நடைபெறும.

மாளிகாவத்தை ரஜபொகுண மாவத்தயில் உள்ள மேற்படி நிலையத்தில் நடைபெறும இந்த ஹதீஸ் மஜ்லிஸின் போது மௌலவியா ஜெஸ்மின் முனாஸ ரமழான் நோன்பு பற்றி விளக்கமளிப்பார். [ஐ—வ]

### கரும்பு உற்பத்தி குறைவு

கொழும்பு, மார்ச் 14

அப்புத்தளை, கொஸ்லாந்தை ஆகிய பகுதிகளில் கரும்பு உற்பத்தி செய்வது குறைந்துள்ளது.

விடும்—

தேங்காய் உற்பத்தி குறைய லாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுவதற்கான காரணம் ஏன்?

தென்னை உரத்தின் விலை உயர்ந்து விட்டது— இப்போது ஒரு தொன் நல்ல தென்னை உரத்தின் விலை ரூபா 7700 ஆகும்—

உரத்தின் விலை உயர்ந்து விட்டதால் பலரும் அதைப் பயன்படுத்துவதைக் குறைக்கவே செய்வர்—

உப்புக் கூட்டுத்தாபனம் உப்புக் கலந்த தென்னை உரம் ஒன்றை புதிதாக விற்பனைக்கு விட்டிருக்கிறது—

இதில் தென்னை மரத்துக்கு வேண்டியளவு சத்து இல்லை என்று தென்னைச் செய்கையாளர்கள் குறை கூறுகிறார்கள்—

தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் தெங்குச் செய்கையாளர்களின் கருத்தை மறுதலிக்கவில்லை—

நல்ல உரத்தின் விலை உயர்வால் தேங்காய் உற்பத்தியும் தெங்குப் பொருள்களின் உற்பத்தியும் பாதிக்கப்படுவது துரதிஷ்டமாகும்—

அரசாங்கம் இதைக் கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும்—

மனித குலத்தின் உயரிய வழிகாட்டிகளான மகாபாரதம், இராமாயணம் போன்ற இலக்கிய நூல்கள் இன்றைய கல்வி முறையிலோ ஆசிரியர்களின் கற்பித்தலிலோ கையாளப்படுவது இல்லை.

இப்படிக் கூறினார் சாவகச்சேரி நகர கொத்தணி அதிபர் திரு க பாலசந்திரன்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஸ்ரீ இராமகிருஷ்ணா, ஸ்ரீவிவேகானந்தா ஆகியோரின் புத்தகக் கண்காட்சி ஒன்று அண்மையில் நடைபெற்றது,

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணா, சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் இது நடத்தப்பட்டது,

இந்த இலவசப் புத்தகக் கண்காட்சியை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசும் போதே நகர் கொத்தணி அதிபர் திரு பாலசந்திரன் மேற்கண்டவாறு கூறினார்,

மகளிர் கல்லூரி அதிபர் திருமதி நவநீதம் தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்தப் புத்தகக் கண்காட்சியில் அவர் மேலும் பேசியதாவது—

மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டிகளாக அமைவன உயர்ந்த அறிவு நூல்களேயாகும்.

ஒரு மனிதனை முழு மனிதனாக்குவது சிறந்த அறிவு நூல்களும் இலக்கிய நூல்களுமாகும், பிள்ளைப் பருவத்தில் பெற்றாரும், மாணவப் பருவத்தில் ஆசிரியர்களும் வழிகாட்டிகளாக உதவுகின்றனர்.

இப்பருவங்களைத் தாண்டியதும் வாலிபர்களான இவர்களை மனம் போன போக்கில் செல்ல விடாது மனிதனாக வாழவழி காட்டி நிற்பன சிறந்த அறிவு நூல்களாகும்,

இப்படி அவர் சொன்னார்,

(ஐ-051)

## மதிய உணவு இடைநிறுத்தம்

ஏறாவூர் மார்ச் 13

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மதிய உணவுக்கான பணக் கொடுப்பனவுகள் கடந்த இரு வாரங்களாக தேக்க நிலையை அடைந்துள்ளன,

பண ஒதுக்கீடு இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை என, கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தினபதிக்குத் தெரிவித்தார்,

பணக் கொடுப்பனவுகள் இல்லாமையால் உணவுக்கான பொருட்களைக் கொள்வனவு செய்வது கடினமாக உள்ளதாயும்,

பணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டால், மீண்டும் மதிய உணவுத் திட்டம் அமுலாகும் எனவும் பாடசாலை ஒன்றின் அதிபர் தெரிவித்தார்.

(ஐ-073)

## மத்ரஸா அமைக்க அடிக்கல் நடும் விழா

கண்டி, மார்ச் 13

கட்டுகஸ்தோட்டை, பொல்கஸ்தெனியா என்னும் இடத்தில் புதிய அரபு மத்ரஸா ஒன்று அமைக்கப்படும்— இதற்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று 15ஆம் திகதி முற்பகல் 9-30க்கு இடம்பெறும்—

மத்திய மாகாண சுகாதார வர்த்தக கூட்டுறவு முஸ்லிம் விவகார அமைச்சர் ஜனாப் எம் எச் எம் ஹலீம் இதனை நாட்டி வைப்பார்— பொல்கஸ்தெனிய முஸ்லிம்கள் இதனை ஏற்பாடு செய்துள்ளனர்—

(இ-017)



## புளொட் தூதுக் குழு— ஹமீது சந்திப்பு

புளொட் இயக்கத்தின் தூதுக் குழுவொன்று அண்மையில் உயர்கல்வி விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சரும் வடக்கு கிழக்கு அமைதிக் குழுவின் தலைவருமான ஜனாப் ஏ சி எஸ் ஹமீதை அவரது அமைச்சில் வைத்து சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்—

திரு டி. சித்தார்த்தனின் தலைமையில் திரு கரவை கந்தசாமி, திரு எஸ் சதானந்தன் மற்றும் திரு சண்முகநாதன் ஆகியோர் புளொட் தூதுக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்—

உயர்கல்வி அமைச்சின் செயலாளர் திரு ஏ ஆர் எம் ஜெயவர்த்தனாவும் படத்தில் காணப்படுகிறார்—

## பயிற்சி திட்டம்

கொழும்பு, மார்ச் 14

வயிற்றோட்ட நோயைப் பரப்பும் பக்டீரியா கிருமிகளை எளிதில் கண்டுபிடிக்கும் முறை குறித்து ஆஸ்பத்திரி டாக்டர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று விரைவில் செயல்படுத்தப்படும்.

(ஐ-வ)

வேறுதலே, சங்கீதம், சித்திரம் ஆகியனவும் பௌதிக விஞ்ஞானம் உயிரியல் விஞ்ஞானம், உடற்கல்வி போன்ற பாடங்களின் பாட விதானங்களுமே தமிழ் மொழி மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளவையாகும்— [ஐ—051]

## அல் குர்ஆன் விளக்கவுரை

முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் வாலிபர் ஒன்றியம் நடத்தும் அல்குர்ஆன் விளக்கவுரை எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6-30க்கு நடைபெறவுள்ளது,

கொழும்பு மெயின் வீதி, இலக்கம் 213 இல் அமைந்துள்ள மு லீ வா மு தலைமையகத்தில் நடைபெறவுள்ள இவ் விளக்க உரையை மஹரகம கபூரியா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம் எம் ஏ முபாறக் (கபூரி) நிகழ்த்துவார்—

(ஐ-099)

கொழும்பு, மார்ச் 14

அப்புத்தளை, கொஸ்லாந்தை ஆகிய பகுதிகளில் கரும்பு உற்பத்தி செய்வது குறைந்துள்ளது— பலர் கரும்பு உற்பத்தியை கைவிட்டுள்ளனர்—

இதற்குக் காரணம் காட்டுப் பன்றிகளின் தொல்லையேயாகும்.

கரும்பு உற்பத்தியாளர்களுக்கு பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட துப்பாக்கிகள் அரசாங்கத்தால் மீண்டும் பொறுப்பேற்கப்பட்டிருப்பதால் இந்த நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது—

[ஐ—மு]

## தேயிலை தோட்டங்கள் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 13

தென் மாகாணத்தில் உள்ள தேயிலைத் தோட்டங்கள் மழை இன்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன—

பெரும்பாலான தோட்டங்களில் தேயிலைச் செடிகள் கருகி அழியும் ஆபத்தும் ஏற்பட்டிருக்கிறது—

தேயிலைச் செடிகள் பாதிக்கப்பட்டிருப்பதால் தொழிலாளர்களின் வேலை நாட்களும் குறைக்கப்பட்டுள்ளன—

[ஐ—மு]

## கிராமங்கள் அபிவிருத்தி

மாத்தளை, மார்ச் 13

மாத்தளையில் சென்ற் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் இரு கிராமங்களை மாதிரிக் கிராமங்களாக அபிவிருத்தி செய்து கொடுக்க இருக்கின்றனர்—

விகாரை வீதியில் அமைந்திருக்கும் இரு கிராமங்களையும் 2 வருடங்களில் அபிவிருத்தி செய்து கொடுப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது—

(இ—017)

மன்னார்—கொழும்பு

# ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

கொழும்பு, மார்ச் 14

மன்னாருக்கும் கொழும்புக்கும் இடையிலான ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் போக்குவரத்து அமைச்சரையும் ரயில்வே திணைக்களத்தையும் கேட்டுள்ளனர்—

நாட்டில் நிலவிய தீவிரவாத நடவடிக்கைகளை அடுத்து மன்னாருக்கும் கொழும்புக்கும் இடையிலான ரயில் சேவை சுமார் ஐந்து வருட காலமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது—

இதனால் மன்னாரிலிருந்து கொழும்பு வரும் பயணிகள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்—

நாட்டில் நிலைமை சீரடைந்து விட்டது— மன்னார் பகுதியிலும் பூரண அமைதி நிலவுகிறது— ஆகையால் மன்னார் — கொழும்பு ரயில் சேவையை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர்—

தற்சமயம் யாழ்ப்பாணத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இரவு ரயில் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன—

இதேவேளை தற்சமயம் மன்னாரிலிருந்து கொழும்பு வரும் பயணிகள் மன்னார் நகரிலிருந்து பஸ் மூலம் அனுராதபுரம் அல்லது மதவாச்சி வரை வந்து அங்கிருந்து யாழ்தேவி மூலம் கொழும்பு வர வேண்டிய நிலை உருவாகியுள்ளது—

ஆகையால் மன்னார் மக்களின் நலன் கருதி மன்னார் — கொழும்பு ரயில் சேவையினை விரைவில் ஆரம்பிப்பது அவசியம் என்றும் இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்—

[ஐ—வ]

சுயநிர்ணய உரிமை கிடைக்காது போனால்

# காஷ்மீரை மக்களே பறித்தெடுப்பார்கள்

## ஆஸாத் காஷ்மீரில் பெனாஸிர் எச்சரிக்கை

முஸபராபாத், மார்ச் 14

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியா வழங்க வேண்டும். அல்லது அவர்களே காஷ்மீரைப் பறித்தெடுத்துக் கொள்வார்கள். இவ்வாறு கூறினார் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ.

வியட்நாம, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை வெற்றி கொள்வதில் வல்லரசுகளான அமெரிக்காவும ரஷ்யாவும தோல்வி கண்டதை இந்தியா ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும எனவும பெனாஸிர் கூறினார்-

ஆஸாத் காஷ்மீர் சட்ட சபையில் பெனாஸிர் பூட்டோ உரையாற்றினார்- அங்கு பேசும போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்- தொடர்ந்து பேசிய பெனாஸிர் பூட்டோ கூறியதாவது—

காஷ்மீரிகளின் போராட்டம எமது போராட்டத்துக்கு ஈடானது-

பாகிஸ்தான் மீது இந்தியா சுமத்தி வரும குற்றச்சாட்டுகள் ஏற்க முடியாதவை- ஐ நா அதிகாரிகள், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் காஷ்மீர் நிலைமைகளை அவதானிக்க இங்கு வர முயன்றனர்- அதற்கும இந்தியா இடமளிக்கவில்லை-



பெனாஸிர்

இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த நாம தயாராக இருக்கிறோம-

இவ்வாறு பெனாஸிர் தெரிவித்தார்-

[எ—ரி]

## வயலெட்டா சமோரா: கவிழ்க்க சதிப்புரட்சி என்றும இடம பெறாது

— ஓர்டேகா அறிவிப்பு

சந்தியாகோ மார்ச் 14

நிக்கரகுவா ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள திருமதி வயலெட்டா சமோராவை கவிழ்க்க ஒருபோதும சதி முயற்சிகள் மேற்கொள்ளப் பட மாட்டாது-

இவ்வாறு தேர்தலில் தோல்வி கண்ட ஜனாதிபதி டானியல் ஓர்டேகா தெரிவித்திருக்கிறார்-

தனது இடதுசாரி சான்டினிஸ்ட்டா இராணுவம சதி நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டாதென அவர் தெரிவித்திருக்கிறார்-

ஏப்ரல் 25ஆம திகதி நிக்கரகுவா அரசு ஆட்சியை கையேற்கும என்பது உறுதியாகி விட்டது-

இவ்வாறு ஓர்டேகா கூறினார் சிலி ஜனாதிபதி பட்ரீசியோ அல்வின் பதவியேற்பு வைபவத்தில் அவர் கலந்து கொண்டார்-

அங்கு உரையாற்றும போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்- (எ)

## குர்திஷ் பிரிவினைவாதிகள் படுகொலை

அங்காரா, மார்ச் 14

துருக்கிய இராணுவத்தினருக்கும துருக்கியிலுள்ள பிரிவினைவாத குர்திஷ் கெரில்லாக்களுக்கும இடையே நடந்த கைகலப்பில் ஒன்பது பிரிவினைவாதிகள் உயிரிழந்தனர்-

கடந்த செவ்வாயன்று நடந்த மோதலில் 9 குர்திஷ் கெரில்லாக்கள் கொல்லப்பட்டனர்- இன்னுமொரு மோதலில் 4 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டனர்-

துருக்கியிலுள்ள குர்திஷ் தொழிலாளர் கட்சி அங்கு வாழும் 90 லட்சம குர்திஷ் மக்களுக்கு தனி கம்யூனிஸ்ட் நாடு கோரி கடந்த ஐந்து வருடங்களாகப் போராடி வருகிறது-

[எ—ரி]

## உலகச் செய்திகள்

### பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் என்ரைல் போட்டியிட தயார்

மணிலா மார்ச் 14

பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் ஜுவான் பொன்ஸ் என்ரைல் 1992 ஆம ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கிறார்-

கடந்த டிசம்பர் மாதம் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொரஸோன் அக்குவினோவைக் கவிழ்க்க சதி செய்ததாக என்ரைல் மீது குற்றம சாட்டப்பட்டிருக்கிறது-

இக்குற்றச்சாட்டு திரிக்கப்பட்ட ஒரு குற்றச்சாட்டு என அவர் தெரிவித்தார்-

கடந்த டிசமபர் மாத சதிப் புரட்சியில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களான தலைவர்கள் அரசிடம சரணடைய வேண்டும-

பிலிப்பைன்ஸில் உள்ள இராணுவத்தில் இனி ஒரு போதும நான் சேர மாட்டேன்-

இவ்வாறு என்ரைல் பத்திரிகையாளர்களிடம தெரிவித்திருக்கிறார்-

கடந்த மாதம் சதிப் புரட்சிக் குற்றச்சாட்டில் கைதான என்ரைல் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே- கடந்த செவ்வாயன்று பத்திரிகையாளர்களுக்கு என்ரைல் பேட்டி அளித்தார்- (எ)

### வங்காளதேசத்தில் தேர்தல் அமர்க்களம்

டாக்கா, மார்ச் 14

எட்டு வருட ஆட்சியில் ஜனாதிபதி எர்ஷாத் கொடுத்த வாக்குறுதிப்படி நேர்மையான தேர்தலுக்கு வித்திடப்பட்டிருக்கிறது-

426 கிராமிய மேயர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள் வன்செயல் பலப்பரீட்சையில் தொடங்கி இருக்கிறது-

இதனால் இதுவரை 6 பேர் கொல்லப்பட்டும, 350 பேர் காயப்பட்டுமிருக்கிறார்கள்-

61 உப மாவட்டங்களில் தேர்தல்கள் புதன்கிழமை ஆரமபமாகின்றன-

நிலைமையைக் கட்டுப்படுத்த பொலீஸாரும இராணுவத்தினரும வாக்குச் சாவடிகளில் நிலை கொண்டுள்ளனர்-

வன்முறைகள் காரணமாக 32 தேர்தல் தொகுதிகளில் தேர்தல்கள் தள்ளிப் போடப்பட்டுள்ளன- வேறு இரண்டு சமபவங்களில் மேலும இருவர் கொல்லப் பட்டுள்ளனர்-

ஐந்து பேர் அடங்கிய பல் நாட்டு பார்வையாளர் குழு ஒன்று தேர்தல் சாவடிகளுக்கு வழி நடத்திச் செல்லப்பட்டது- ஆனால் அமெரிக்க பாதிரி ஆர், டபிள்யூ ரிம தலைமையிலான உள்நாட்டுப் பார்வையாளர் குழு செயல்படாமல் தடுக்கப்பட்டுள்ளது-

தேர்தல் ஆணையாளர் தான் மக்கள் மத்தியில் அமைதியை எதிர்பார்க்கிறார்- அதேவேளை தேசிய ஒளிபரப்பில் தேர்தல் குளறுபடிகளைக் கண்டித்து எச்சரித்துமிருக்கிறார்-

[எ—ரி]

### உலகதலைவர்கள் ஆலோசனையேற்க கஸ்ட்ரோ மறுப்பு

ஹவானா மார்ச் 14

ஏனைய உலகத் தலைவர்களின் ஆலோசனைகளை நான் ஏற்க மாட்டேன்-

இவ்வாறு கியூபா ஜனாதிபதி பிடெல் கஸ்ட்ரோ அறிவித்தார்-

அரசியல் சலுகைகளைப் பெற உலகத் தலைவர்களின் ஆலோசனைகளை ஏற்று நல்லவன் என்ற பெயர் வாங்க நான் தயாராக இல்லை என அவர் தெரிவித்தார்-

ஹவானாவில் நடந்த கூட்டமொன்றில் ஆயிரக் கணக்கான மாணவர் மத்தியில் அவர் இது பற்றிக் கூறினார்- (எ)

## நிக்கரகுவா மீதான பொருளாதார தடையை நீக்க அமெரிக்கா உத்தரவு

வாஷிங்டன் மார்ச் 14

நிக்கரகுவா மீதான பொருளாதாரத் தடையை நீக்கும படி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் செவ்வாயன்று உத்தரவிட்டிருக்கிறார்-

சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் நிக்கரகுவா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை கொண்டு வந்தது-

ஜனாதிபதித் தேர்தலில் நிக்கரகுவா ஜனாதிபதி டானியல் ஓர்டேகா தோல்வி கண்டார்- அவரது இடத்திற்கு திருமதி வயலெட்டா சமோரா தெரிவாகியிருக்கிறார்-

தேர்தல் முடிவுகள் வெளியாகி இரு வாரங்களுக்கிடையில் நிக்கரகுவா மீதான பொருளாதாரத் தடையை நீக்கும்படி புஷ் பணித்திருக்கிறார்-

இதேவேளையில் நிக்கரகுவாவுக்கும பனாமாவுக்கும உதவி வழங்க "ஜனநாயக நிதி" என்ற பெயரில் நிதி ஒன்று ஆரம்பிக்கப் படவேண்டுமென காங்கிரஸை புஷ் கேட்டிருக்கிறார்-

இரு நாடுகளிலும சரிந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இது உதவும் என அவர் தெரிவித்திருக்கிறார்- (எ)

## வடக்கு கிழக்கு மா சபை நிர்வாகத்தை தொடர்ந்து கண்காணிப்பேன்

## நாய்க்கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை

## தமிழ் — சிங்கள புத்தாண்டையிட்டு கிராமிய பாட்டுப் போட்டி

# வடக்கு கிழக்கு மா' சபை
# நிர்வாகத்தை தொடர்ந்து கண்காணிப்பேன்

## திருமலையில் ஆளுநர் நளின்

திருகோணமலை மார்ச் 13
வடக்கு கிழக்கு மாகாண சபையின் நிர்வாகம தொடர்ந்து நடைபெறுவதை நான் கண்காணித்து வருவேன். நிலைமைகளை உடனுக்குடன் ஜனாதிபதிக்கு அறிவிப்பேன். மேலதிக நடவடிக்கைகளை எடுப்பது ஜனாதிபதியின் கடமையாகும்.

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் லெப்டினண்ட் ஜெனரல் நளின் செனவிரத்ன "தினபதி"க்கு இப்படித் தெரிவித்தார்.

ஆளுநர் நளின் செனவிரத்ன திங்கள் மாலை திருகோணமலை வந்தடைந்தார்.

அவரை "தினபதி" நிருபர் செவ்வாய் பிற்பகல் அவரது அலுவலகத்தில் வைத்துச் சந்தித்தார்.

அவர் திருகோணமலை நிலவரம பற்றி விவரித்தார்.

"நகரை நான் சுற்றிப் பார்த்து வந்தேன். மக்கள் மகிழ்ச்சியோடு காணப்படுகின்றனர். வர்த்தகர்கள் விறுவிறுப்பாக வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நகரிலோ மக்கள் மத்தியிலோ பயமோ பீதியோ இருப்பதாகத் தெரியவில்லை என்று ஆளுநர் சொன்னார்.

மாகாண சபையின் பேரவைச் செயலாளர் திரு ஜி கிருஷ்ணமூர்த்தியும் எனது செயலாளர் திரு எஸ் கணேசானந்தனும கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏனைய செயலாளர்கள் அச்சம காரணமாக வெளியேறி உள்ளனர். அவர்கள் ஏற்கனவே தங்களுக்குப் பாதுகாப்புத் தருமபடி என்னிடம கேட்டனர். அனைவருக்கும பாதுகாப்பு அளிப்பது இலகுவல்ல" என்றும கூறினார்.

"நிலைமை சீரடைந்ததும அவர்கள் தங்கள் கடமைகளுக்குத் திரும்புவர்" என்றும அவர் தெரிவித்தார்.

[ல—ங—288]

## மார்க்க சொற்பொழிவு

கொழும்பு, மார்ச் 13
"ஷஃபான் மாதத்தின் முக்கியத்துவம" என்ற தலைப்பில் மௌலவி எம ஈ ஷாஹுல் ஹமீத் கொழும்பு மருதானை, பஞ்சிகாவத்தை ஸாவியாவில் மார்ச் 16ஆம திகதி மாலை உரையாற்றுவார்.

அத்திஆயதுஷ் ஷாதுலிய்யதுல் ஸாவியாவின் ஹழரா மஜ்லிசில் இச்சொற்பொழிவு ஏற்பாடாகி உள்ளது.

(ல—007)

## 9 வயது சிறுமி குழந்தை பிரசவித்தார்

அங்காரா மார்ச் 13
துருக்கியைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமி ஒருத்தி செவ்வாய்க்கிழமை குழந்தையொன்றைப் பிரசவித்ததாக அறிவிக்கப்படுகிறது.

மேற்கு துருக்கி நகரான அப்யோன் சிறுமிருத்தியே குழந்தை ஒன்றைப் பிரசவித்திருக்கிறார்.

தாய்க்கு ஆபத்தேதுவும ஏற்படக் கூடாதென்ற காரணத்தால் டாக்டர்கள் சத்திரசிகிச்சை மேற்கொண்டனர்.

இராமப்புற இளைஞர் ஒருவரால் தாய்மையுற்ற பிரஸ்காப சிறுமி அவர் தாய்மை அடைந்திருக்கிறார் என்பதை வைத்திய நிபுணர்கள் ஒரு மாதத்திற்கு முன்னரே கண்டு பிடித்தனர்.

[ஏ]

## நாய்க்கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

ஏறாவூர், மார்ச் 13
மட்டக்களப்பு மாவட்டத்தில் நாய்க்கடிக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூடுதலான வரட்சி நிலவுவதால் நாய்களுக்கு விசர் பிடித்துள்ளதாயும தெரிய வருகிறது.

நாளொன்றுக்கு 150 க்கு மேற்பட்டவர்கள் மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு நாய்க்கடிக்கு சிகிச்சை பெற வருவதாக அச் சிகிச்சைப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[ஐ—073]

# கல்வியை பூர்த்தி செய்யாமல்
# பாடசாலை விட்டு
# வெளியேறுபவர்களுக்கு
## தொழிற் பயிற்சி வழங்கப்படும்

கல்வியைப் பூர்த்தி செய்யாமல் பாடசாலைகளில் இருந்து இடைநடுவில் வெளியேறுபவர்களுக்குத் தொழில் பயிற்சிகள் வழங்கப்படும.

இதற்காக தொழில் பயிற்சி நிறுவனம ஒன்றை "பாமிஸ்" இயக்கம அமைக்க உள்ளது.

இந்த நிலையத்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயப்பட்டு வருவதாக பாமிஸ் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எம எம ஸுஹைர் தெரிவித்தார்.

"தஃவா" இஸ்லாமியப் பிரசாரப் பணியினை மேற்கொள்பவர்களுக்காக கருத்தரங்குகளையும, தொழில் கூடங்களையும நடத்தவும பாமிஸ் உத்தேசித்து வருவதாக ஜனாப் ஸுஹைர் மேலும கூறினார்.

அம்பாறை மாவட்டத்தில் இடம பெயர்ந்த 16 மாணவர்களுக்கு கல்வியைத் தொடருவதற்கு மூன்றாண்டுகளுக்கான புலமைப் பரிசில் உதவியையும பாமிஸ் வழங்கியது.

இவர்கள் ஜீ சி ஈ சாதாரண தர, உயர்தர வகுப்பு மாணவர்கள் என்றும தலைவர் கூறினார்.

(ஐ—007)

தமிழ் — சிங்கள புத்தாண்டையிட்டு

# கிராமிய பாட்டுப் போட்டி
## சுயாதீன பத்திரிகா சமாஜம் நடத்தும்

கொழும்பு, மார்ச் 14
தமிழ் – சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கல்வி, கலாசார, தகவல்துறை அமைச்சு ஒழுங்கு செய்துள்ள அகில இலங்கை கிராமிய பாட்டுப் போட்டியை ஏற்று நடத்த தினபதி பத்திரிகையை வெளியிட்டு வரும சுயாதீன பத்திரிகா சமாஜம முன்வந்துள்ளது.

இக்கிராமிய பாட்டுப் போட்டி உதவி அரசாங்க அதிபர் மட்டத்திலும பின்னர் மாவட்ட ரீதியாகவும நடத்தப்படும. முதல் பிரிவில் தெரிவானோரே மாவட்டப் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

இந்நாட்டு மக்களிடையே புரிந்துணர்வு, ஒற்றுமை மற்றும சமாதானத்தை நிலவச் செய்யும முகமாகவே இப்புத்தாண்டு பாட்டுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்பாட்டுப் போட்டியில் ஆண்களும, பெண்களும கலந்து கொள்ள முடியும. தமிழ் – சிங்கள புத்தாண்டை கருப்பொருளாகக் கொண்ட கிராமியப் பாடல்களை போட்டியில் பங்குபற்றுவோர் இசைக்க முடியும. அவை புதிய பாடல்களாக மட்டுமின்றி பழைய பாடல்களாகவும இருக்கலாம.

இப்போட்டியின் கனிஷ்ட பிரிவில் கலந்து கொள்பவர்கள் 15 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும, சிரேஷ்ட பிரிவில் பங்குபற்றுபவர்கள் 15 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும இருக்க வேண்டும.

கிராம சேவகர் மட்டத்தில் இப்போட்டி அப்பகுதியைச் சார்ந்த பாடசாலை அதிபர்கள், பொலீஸ் உத்தியோகத்தர்கள், சுயாதீன பத்திரிகா நிறுவன நிருபர்கள், கிராமப் பிரமுகர்கள் மற்றும சமூக சேவை ஸ்தாபன அதிகாரிகள் ஆகியோரால் ஒழுங்கு செய்யப்படும. அப்பகுதியில் வசிப்பவர்கள் மட்டுமே விண்ணப்பம மூலம இப்போட்டியில் பங்கு கொள்ள முடியும.

தனி ஒரு கிராம சேவகர் பிரிவினால் இப்பாடல் போட்டிக்கான ஒழுங்குகளை மேற்கொள்ள முடியாது போகுமானால் பல கிராம சேவகர் பிரிவுகள் ஒன்றிணைந்து ஒரு குழுவாக இப்போட்டியில் பங்கேற்க முடியும. ஆனால் கிராம சேவகர் பிரிவு போட்டிகள் நல்ல முறையில் நடைபெறுவதை இந்த அமைப்பாளர் குழுவினரே உறுதி செய்ய வேண்டும.

இப்பாடல் போட்டியில் கலந்து கொள்பவர்கள் எவ்வாறு தமது பாடலை சமர்ப்பிக்கும பாவமும, அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள கருப்பொருளின் தன்மையும நடுவர்களினால் கவனத்தில் கொள்ளப்படும.

இப்போட்டி ஏப்ரல் 14ஆம திகதிக்குள் நடைபெற்று முடிவடையும.

உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் நடத்தப்படும பாடல் போட்டி உதவி அரசாங்க அதிபர், உதவி கல்விப் பணிப்பாளர், பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், சுயாதீன பத்திரிகா நிறுவனத்தைச் சேர்ந்த நிருபர்கள், உயர் அரசாங்க அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோராலும சமூக சேவை நிறுவனங்களாலும ஒழுங்கு செய்யப்படும.

கிராம சேவகர் பிரிவில் முதலாம, இரண்டாம மற்றும மூன்றாம இடத்தைப் பெற்றவர்களே இப்போட்டியில் பங்கெடுக்க முடியும.

இவ்விரண்டாம பிரிவுப் போட்டி ஏப்ரல் 15ஆம திகதிக்குள் நடைபெற்று முடிவடையும. போட்டி நடுவர்கள் முதல் மூன்று இடங்களை வெற்றி கொண்டவர்களைத் தெரிவு செய்வர்.

இப்பாடல் போட்டி தொடர்பான விவரங்கள் சுயாதீன பத்திரிகா நிறுவன வெளியீடுகளில் அவ்வப்போது வெளியிடப்படும.

(ஐ—032)

## கதிர்காமருக்கு உயர்நீதிமன்றம் அஞ்சலி

கொழும்பு, மார்ச் 14
காலஞ்சென்ற பிரபல சட்டத்தரணி சாம கதிர்காமர் கியூ சியை நினைவு கூரும வகையில் நாளை வெள்ளிக்கிழமை 16ஆம திகதி காலை பத்து மணிக்கு உயர் நீதிமன்றம கூடுகிறது.

உயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் ஐந்தாம மாடியில் அமைந்துள்ள வைபவ ரீதியான அமர்வுக்கான மண்டபத்தில் உயர் நீதிமன்றம கூடி காலஞ்சென்ற சாம கதிர்காமருக்கு அஞ்சலி செலுத்தும.

(ல—032)

அபூபக்கர்...

அவர் மேலும் கூறியதாவது—

மை என்று கேட்டுக் கொள்கி

றேன்— இப்படி அவர் பேசினார்

# பௌத்தத்தை வைத்து அரசியல் இலாபம் தேடக் கூடாது

## —அத்தாவுட

கொழும்பு மார்ச் 14

இங்கு பௌத்தர்கள் கூடுத லாக வாழ்கின்றோம் என்ப தால் பௌத்த மதத்தை அடிப்படையாக வைத்து அரசி யல் இலாபம் தேடக் கூடாது— இப்படிக் கூறினார் ஐக்கிய சோஷலிஸ முன்னணி எம் பி திரு அத்தாவுட செனவிரத்ன—

பௌத்த சாசன நிதியச் சட்ட வரைவு விவாதத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்— அவர் மேலும் கூறியதாவது—

முஸ்லிம் சிங்களவர்கள் கூடுத லாக வாழ்கிறோம் என்று சிங் கள மொழிச் சட்டம் கொண்டு வரப்பட்டது— அதனால் ஏற் பட்ட விபரீதங்களை அறிவோம்

பௌத்த மதத்தைப் பாது காக்க வேண்டும்— அதை நாம் எதிர்க்கவில்லை— அதை வைத்து அரசியல் இலாபம் தேடுவதையே கண்டிக்கிறோம்—

இங்கு பல இனங்களையும் மதங்களையும் சேர்ந்த மக்கள் இணைந்து வாழ்கின்றோம்— எல்லா மதங்களும் மதிக்கப்பட வேண்டும்—

சட்டங்களை திருத்தி விட் டால் மட்டும் போதாது— கொலைகள் கொள்ளைகள் மேலும் ஏற்படாத வகையில் எமது மனங்களையும் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்—

மதங்கள் எல்லா இன மக்கள் மத்தியிலும் உளப் பண்பாட்டை யும் உயர்ந்த நோக்கங்களை யும் உருவாக்க வேண்டும்—

இப்படி திரு அத்தாவுட சென விரத்ன குறிப்பிட்டார்— (உ—ய)

# உயிர் இழந்தவர்களின் 300 குடும்பங்களுக்கு ஜனாதிபதி புத்தாண்டு பரிசு

கொழும்பு மார்ச் 14

தீவிரவாத நடவடிக்கைகளி னால் உயிரிழந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய ஊழியர் சங்கத்தின் 300 உறுப்பினர்களின் குடும்பத்தி னருக்கு சுமார் மூன்று லட்சம் ரூபா வழங்கப்படும்—

ஜனாதிபதி திரு ஆர் பிரேம தாசா ஏப்ரல் 6 அம் திகதி கோட்டேயிலுள்ள ஐ தே க வின் தலைமையகமான சிறிகொத்தா வில் வைத்து இந்த உதவிப் பண த்தை கையளிப்பார்—

அன்றைய தினம் இறந்தவர் களின் குடும்பத்தினருக்கு உண வுப் பார்சல்களும், புடைவை உட்பட வேறு பொருட்கள் அடங்கிய அன்பளிப்புப் பார் சல்களும் வழங்கப்படும்—

தமிழ் - சிங்கள புது வருட த்தை முன்னிட்டே இவை வழங் கப்படவிருப்பதாக சங்கத்தின் செயலாளர் திரு சிறிலால் டி மெல் தெரிவித்தார்—

(உ—வ)

ணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

முறைப்பாடொன்றைப் பதிவு செய்யுமுகமாக தான் ஆன மடுவை பொலீஸ் நிலையம் சென்றதாகவும் ஆனால் பொலீ ஸார் தன்னைத் திருப்பி அனுப்பி விட்டதாகவும் இங்கு தெரிவித்த சாட்சி இரண்டாம் தடவை யாக தான் சுதந்திரக் கட்சி அமைப்பாளரையும் அழைத் துக் கொண்டு சென்றதாகவும் அப்போதும் தனது முறைப்பாட் டைப் பதிவு செய்ய பொலீ ஸார் மறுத்து விட்டானர் என் றும் இங்கு தெரிவித்தார்—

முதலில் எச் எம் குணசேன சாட்சியமளித்தார்— பிரதி வாதி தரப்பு சட்டத்தரணி எஸ் சி தமையா சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்—

சட்டத்தரணி— இருபதாம இலக்க வத்தேவ வாக்குச் சாவடியில் நீர் கட்சிப் பிரதி நிதியாக செயல்பட்டீரா?

அப்படியாயின் உமக்குத் தெரி யுமா?

சாட்சி— இப்பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன்— அச் சமயம் பல அரசியல் கொலை கள் நிகழ்ந்து வந்ததால் கொலை செய்யப்பட்டவர்கள் எக் கட்சியை சேர்ந்தவர்கள் என்பது நான் அறிந்திருக்க வில்லை—

சட்டத்தரணி— இப்பெயரைக் கொண்ட யாராவது கொல்லப் பட்டாரா?

சாட்சி— எனக்கு ஞாபகம் இல்லை—

சாட்சியை சட்டத்தரணி அனில் ஒப்பசேகர விசாரணைக் குட்படுத்தினார்— இதன் பின்னர் சந்தரரத்ன என்பவர் சாட்சிய மளிக்க அழைக்கப்பட்டார்— கட்டுக்கம்பொலை தொகுதி யின் வத்தேகெதர சுதந்திரக் கட்சிக் கிளையின் தலைவரான இவரை மனுதாரர் தரப்பு சட்டத்தரணி அனில் ஒபயசேகர விசாரித்தார்—

சட்டத்தரணி— 1988 டிசம் பர் மாதம் இரண்டாம் வாரத் தில் இனந்தெரியாதோர் யாராவது உமது வீட்டுக்கு வந் தனரா?

சாட்சி— ஆம்— டிசம்பர் 12 ஆம் திகதி இரவு இனந்தெரி யாத குழுவினர் என் வீட்டுக்கு வந்து என்னை வெளியே வரும் படி அழைத்தனர்— பயம் காரண மாக நான் கதவைத் திறந்தேன், அப்போது ஆயுதம் தாங்கிய நால்வர் துப்பாக்கிகளை என்னை நோக்கி நீட்டியபடி விரைப்பாக நிற்கும்படி கூறி னர்— பின்னர் தேர்தல் பணிக ளில் இருந்து விலகிக் கொள் ளும்படியும் வாக்களிக்கச் செல்ல வேண்டாம் என்றும் என்னிடம் கூறினோர் வாக் களித்தால் மரணமே தண்டனை

சட்டத்தரணி— இக்காலத் தில் போது சுவரொட்டிகள் தோன்றினவா?

சாட்சி— ஆம்— தொலைப் பயமுறுத்தல் விடுக்கும் இச் சுவரொட்டிகள் பொது இடங் களில் ஒட்டப்பட்டன—

சாட்சியை எஸ் சி தமையா குறுக்கு விசாரணை செய்தார்—

சட்டத்தரணி— அப்பகுதி யைச் சேர்ந்தவர்களும் இத் துப்பாக்கி முழங்கும் ஓசையைக் கேட்டிருப்பார்கள் அல் லவா?

சாட்சி— ஆம்—

இதன் பின்னர் சாட்சியம் அளிக்க எஸ் எம் தால்ப் அழைக்கப்பட்டார்— இவர் கட் டுக்கம்பொலைத் தொகுதியைச் சேர்ந்த மகரகமையைச் சேர்ந் தவர்—

சட்டத்தரணி— தேர்தல் தினத்தன்று அட்டமன்கலை மாவட்ட அபிவிருத்தி சபை அலுவலகத்தில் அமைக்கப்பட்டி ருந்த சாவடியில் தேர்தல் பிரதிநிதியாக நீர் கடமையாற்றி னீரா?

சாட்சி— நான் அங்கு கட மையாற்ற முடியாமற் போனது, நான் இத்தேர்தல் சாவடியை நோக்கிச் செல்ல முற்பட்ட போது அங்கு செல்ல வேண் டாமென சிலர் என்னிடம் தெரி வித்தனர்— இதனால் நான் வாக்களிக்கவில்லை— வீட்டில் உள்ள எட்டு வாக்காளர்களும் வாக்களிக்கவில்லை—

இச் சாவடியும் மாற்றப்பட் டது—

சட்டத்தரணி— இடமாற் றம் செய்யப்பட்ட சாவடியில் எத்தனை வாக்காளர் வாக்க ளித்தனர்?

சாட்சி— ஒரு வாக்கு கூட அளிக்கப்படவில்லை—

சட்டத்தரணி— இதை நீர்

துரைத்தார்— இம் மனுவில் தெரி விக்கப்பட்டுள்ள சில குற்றச் சாட்டுக்கள் பேரில் போது மான சாட்சியங்கள் சமர்ப்பிக் கப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டிய அவர் பாதிக்கப்பட்ட வரை முதலில் சாட்சியமளிக்க அழைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்—

பிரதம நீதியரசர்— இவரும் கூட நேரடி சாட்சிதான்— இவர் சம்பவத்தை நேரில் கண் டிருக்கக் கூடும்— இரு சாட்சி களுக்கும் நாம் செவிமடுப் போம்—

சட்டத்தரணி குணசேகர— வடிகமங்காவையில் நீர் குடி யிருக்கிறீரா?

சாட்சி கருணாரத்ன— ஆம்—

சட்டத்தரணி— இங்குள்ள பௌத்த விகாரையின் பெயர் என்ன?

சாட்சி— தர்மகீர்த்தி விகாரை— எனது குடியில் இரு ந்து 80 யார் தொலைவில் அமைந்துள்ள இவ்விகாரை ஐந்தாண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டது— எனது தந் தையார் அரை ஏக்கர் காணியை இதற்கென தான மாக வழங்கினார்— முதலில் இங்கிருந்த பௌத்த பிக்கு விகாரையை விட்டு சென்றதும் இன்னும் ஒருவர் பொறுப்பை ஏற்றார்— அவரும் சென்ற பின் னர் வண கல்குளிய தர்மரத்ன தேரர் இங்கு வந்தார்—

சட்டத்தரணி— 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் இவ் விகாரையில் வசித்து வந்த பிக்கு இவர்தானா?

சாட்சி— ஆம்— இவருக்கு 35 வயதிருக்கும்—

சட்டத்தரணி— துறவியான பின்னரும் கூட இவர் சுதந்திரக் கட்சி ஆதரவாளராகத்தான் இருந்தாரா?

சாட்சி— ஆம்— இவர் கட்சி ஆதரவாளராக இருந்தார்—

[ல—032]

உப தலைவர்— ஜனாப் எம் எல் எம் கலீல் [ஆசிரியர்]

செயலாளர்— ஜனாப் எம் எச் எம் மசூர் [ஆசிரியர்]

உபசெயலாளர்— எம் எஸ் ஏ ஹபீள்

பொருளாளர் ஏ டபிள்யூ எம் நஸீர் [மௌலவி]

ஆலோசனைக் குழு— எம் எச் எம் ஹமசின் (கிராம சேவகர்] எம் எச் எம் நிஸார் [ஆசிரியர்] ஏ சீ எம் நிஸாமு தீன் [ஆசிரியர்] ஜனாப் சுஹைல் மௌலானா

விளையாட்டுக்குழு அங்கத்த வர்கள்— ஏ எம் எம் அர்ஹம் எம் எம் முஸ்னி எஸ் ஏ எம் அனீஸ் ஏ பீ எப் கரீம் எம் ஏ எம் அஸ்வான்— [ஐ—மு]

# இடமாற்றம்

மடவளை மார்ச் 13

அக்குறணை சாஹிரா மகா வித்தியாலய அதிபர் ஜனாப் எம் எம் எம் சுஐப் தெஹி தெனிய முஸ்லிம் மகா வித்தி யாலயத்திற்கு அதிபராக இட மாற்றம் செய்யப்பட்டுள் ளார்—

சாஹிரா மகா வித்தியாலய உதவி அதிபர் ஜனாப் ஏ சீ ஏ றஸாக் அதே வித்தியாலயத்திற்கு அதிபராக நியமனம் செய்யப்பட் டுள்ளார்—

மேற்படி மாற்றங்களை உயர் கல்வி விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் அல்ஹாஜ் ஏ சீ சாஹுல் ஹமீதின் பணிப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகத் தெரிய வருகிறது—

(ஐ—431)

மைக்கெட்டிங் குழுவின்

# 2ஆவது தெ. ஆபிரிக்க சுற்றுலா ரத்து

லண்டன் மார்ச் 14

எதிர்வரும நவமபர் மாதம் மைக்கெட்டிங குழுவினர் மேற்கொள்ளவிருந்த இரண்டாவது தென் ஆபிரிக்க கிரிக்கெட் சுற்றுலா ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது- மைக் கெட்டிங இதுபற்றித் தெரிவித்தார்-

தென் ஆபிரிக்கக் கறுப்பின மக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாத வெள்ளையர் அணிகளை அழைத்துச் சென்று அங்கு ஆட்டஙகளை நடத்துவதை இனிமேலும தொடர தென் ஆபிரிக்க கிரிக்கெட் ஒன்றியம விருமபவில்லை என்று தெரிகிறது-

மேற்படி ஒன்றியம தேசிய விளையாட்டுத்துறை காஙகிரஸ் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி இவ்விடயத்தில் இணக்கபூர்வமான சூழ்நிலையைத் தோற்றுவிக்க விரும்புகிறது-

இதையடுத்தே மைக்கெட்டிங தலைமையிலான இரண்டாவது கிரிக்கெட் சுற்றுப் பயணம ரத்துச் செய்யப்பட்டது-

மைக்கெட்டிங்கும் அவரது குழுவினரும கடந்த வாரமே தமது தென் ஆபிரிக்க சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திருமபினர்- ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி இவர்கள் எதிர்வரும நவமபரில் மீண்டும தென் ஆபிரிக்கா செல்ல வேண்டும-

ஆனால் தென் ஆபிரிக்கத் தேசிய காஙகிரசின் விளையாட்டுத்துறை பிரிவான தேசிய விளையாட்டு அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்கு போட்டி ஏற்பாட்டாளர்கள் விரும்புவதை அடுத்தே இரண்டாவது சுற்றுப் பயணம ரத்துச் செய்யப்பட்டுள்ளது-

மைக்கெட்டிங தலைமையிலான முதல் சுற்றுப் பயணத்தில் கறுப்பின மக்களின் கடும எதிர்ப்பை இங்கிலாந்து வீரர்கள் எதிர்நோக்கினர்- இதன் காரணமாக இச்சுற்றுப் பயணம தொடரப்படவில்லை-

கடந்த வாரம அணியினர் இஙகிலாந்து திருமபினர்-

இதே சமயம் தான் எதிர்பார்த்த தொகை இச்சுற்றுப் பயணத்தின் மூலம கிடைக்கவில்லை என்பதால் மைக்கெட்டிங ஏமாற்றம அடைந்துள்ளார்-

இச்சுற்றுப் பயணத்தைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டதால் 40 சதவீத சமபளமே தனக்கு வழங்கப்பட்டதாக அவர் கூறினார்-

96 ஆயிரம அமெரிக்க டாலர்களுக்கும குறைவான தொகை ஒன்றையே தான் பெற்றுக் கொண்டதாகவும அவர் தெரிவித்தார்- (எ—032)

## கிரிக்கெட் போட்டிகள்

மடவளை மார்ச் 13

ராஜகிரிய ஜனாதிபதி வித்தியாலயம கிரிக்கெட் போட்டியில் 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது-

கண்டி பொலீஸ் மைதானத்தில் கிரிக்கெட் போட்டி நடந்தது-

கண்டி புனித போல் கல்லூரி முதலாம இனிங்ஸில் 123 ஓட்டஙகளையும - இரண்டாம இனிங்ஸில் 186 ஓட்டஙகளையும பெற்றது-


ஜனாதிபதி வித்தியாலயம முதலாம இனிஙஸில் 256 ஓட்டஙகளையும இரண்டாம இனிஙஸில் விக்கெட் இழப்பின்றி 54 ஓட்டஙகளையும பெற்றது-

தர்மராஜ - மகிந்த கல்லூரி கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது-

பேராதனையில் நடைபெற்ற மேற்படி போட்டியில் கண்டி தர்மராஜாக் கல்லூரி முதலாம இனிஙஸில் 9 விக்கெட் இழப்பிற்கு 160 ஓட்டஙகளையும இரண்டாம இனிஙஸில் 5 விக்கெட் இழப்பிற்கு 87 ஓட்டஙகளையும பெற்றது-

மகிந்தா கல்லூரி 8 விக்கெட் இழப்பிற்கு 209 ஓட்டஙகளைப் பெற்றது-

போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது- (எ—431)



# விளையாட்டு பகுதி

## பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இலங்கை வரும்?

### கெத்தாராம விளையாட்டரங்கில் போட்டிகள்

கண்டி மார்ச் 13

3 வருடஙகளுக்குப் பின்னர் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் அணியினைச் சந்திக்கும வாய்ப்பு இலஙகையருக்குக் கிட்டவிருக்கிறது-

கொழுமபு கெத்தாராம விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ள இவ்வாறு இலஙகை வர இருக்கும சர்வதேச கிரிக்கெட் அணி பாகிஸ்தானைச் சேர்ந்ததாகும-

இவ்வருடம மே மாதம் அளவில் பாகிஸ்தான் அணி இலஙகை வரும என நம்பகரமாகத் தெரிகின்றது- மூன்றரை வருடஙகளாக எந்த ஒரு வெளிநாட்டுக் கிரிக்கெட் அணியும இலஙகைக்கு வர முடியாமல் போய் விட்டது- இலஙகையில் நிலவிய அமைதியின்மையே இதற்குக் காரணமாகும-

இரண்டு வாரஙகள் பாக்- அணி இலஙகையில் தஙகி இருப்பார்களாம்- ஒரு நாள் சர்வதேச போட்டியிலும நான்கு நாட்கள் கொண்ட ஒரு போட்டியிலும இலஙகை - பாக் அணிகள் கலந்து கொள்ளும-

இந்தப் போட்டிகள் தொடர்பான இறுதி முடிவுகள் இன்னும மேற் கொள்ளப்படவில்லையாயினும இரு நாடுகளினதும அரசாஙகத் தலைவர்களுக்கிடையிலான புரிந்துணர்வுடன் நடைபெற இருக்கும போட்டிகளாக அமையும என எதிர்பார்க்கப்படுகின்றது-

சர்வதேச கிரிக்கெட் நிகழ்வுக் கால அட்டவணையில் இந்த இரு நாடுகளுக்குமிடையிலான போட்டிகள் பற்றி விவரம இடமபெறவில்லை-

பாக்- அணியினர் இலஙகை வரும பொழுது கொழுமபில் மாத்திரமே நடைபெறும போட்டிகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புக்களும இருப்பதாகக் கூறப்படுகிறது- (எ—017)

### இல. வீரருக்கு சவூதியில் விருது

கண்டி, மார்ச் 13

இலஙகை விளையாட்டு வீரருக்கு சவூதி அரேபியாவில் 1988/89 ஆம ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன-

நாவலப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும ஜெஸ்மேரிஸ் கல்லூரியின் பழைய விளையாட்டு வீரருமான முஸமமில் பாருக் என்பவருக்கே இந்த விருதுகள் கிடைக்கப்பெற்றன-

சவூதி அரேபியாவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் உதைபந்தாட்டம, கரபந்தாட்டம, கிரிக்கெட் போன்ற சகல விளையாட்டுக்களிலும முஸமமில் பாருக் சிறந்த வீரராகத் தெரிவானார்- [எ—017]

## இல்ல விளையாட்டு போட்டிகள்

கொழுமபு, மார்ச்- 14

பண்டாரவளை கல்விப் பிராந்தியத்தைச் சேர்ந்த பூனாகல முதலாம இலக்க தமிழ் வித்தியாலய இல்லஙகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி எதிர்வரும 19 ஆம திகதி நடைபெறவுள்ளது- (எ—039)

★

சித்தன்கேணி மார்ச் 13

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்ற போது சோழன் இல்லம அதிக புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்திற்கான "சாமபியன்" வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது-

இப்போட்டியில் சேரன் இல்லம இரண்டாம இடத்தையும பாண்டியன் இல்லம மூன்றுமிடத்தையும பெற்றுக் கொண்டன- (எ—283)

★

அக்குறணை ஸாஹிராக் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடந்தன-

ஸாஹிரா கிறீன்ஸ் 241 புள்ளிகளையும -ஸாஹிரா யெலோஸ் 173 புள்ளிகளைப் பெற்று முதலிரண்டு இடஙகளைப் பெற்றன (எ)

★

சாவகச்சேரி மார்ச் 13

நாவற்குழி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் சமபந்தர் இல்லம சாமபியன் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது-

சமபந்தர் - அப்பர் -சுந்தரர் இல்லஙகளுக்கிடையில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டிகளில் தபெனின்சுலா குறாப் தொழில் நிறுவன முகாமையாளர் திரு மகேந்திரராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்- (எ—051)

## அக்குறணையில் விளை. போட்டிகள்

மடவளை, மார்ச் 13


அண்மையில் அக்குறணை கொத்தணி பாடசாலைகளுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நடந்தன-

அக்குறணை மத்திய கல்லூரி, மைதானத்தில் போட்டியிட்ட 17 பாடசாலைகளில் அக்குறணை மத்திய கல்லூரி முதலாம இடத்தைப் பெற்றது- அக்குறணை ஸாஹிரா வித்தியாலயம இரண்டாம இடத்தைப் பெற்றது-

17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டியில் அக்குறணை லுக்மானியா வித்தியாலயம வெற்றி பெற்றது-

15 வயது, 19 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் அக்குறணை மத்திய கல்லூரி முதலாம இடத்தையும அக்குறணை லுக்மானியா மகா வித்தியாலயம இரண்டாம இடத்தையும பெற்றன [எ—ரி—431]

## விமான சேவைகள்



மார்ச் 15 (வியாழக்கிழமை)

மார்ச் 16 (வெள்ளிக்கிழமை)

வடகைலை தென் கைலை காட்சிகள்

கலாநிதி அல்ஹாஜ் எம ஏ எம சுக்ரி

8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும

## மார்ச் 15 (வியாழக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0540 | குராச்சி பமபாய் | யூ | எல் | 182 |
| 0625 | சூரிச் சார்ஜா | பி | பி | 602 |
| 0715 | சிப்போல் பாரீஸ் அபுதாபி | யூ | எல் | 564 |
| 0740 | பிராங்போர்ட் சூரிச் துபாய் | யூ | எல் | 548 |
| 0800 | துபாய் | ஈ | கே | 800 |
| 1005 | வியன்னா | எல் | டி | 903 |
| 1105 | திருச்சி | யூ | எல் | 132 |
| 1140 | சென்னை | ஐ | சி | 573 |
| 1150 | சோபியா துபாய் | எல் | இஸட் | 581 |
| 1230 | ஹம்பேர்க் டசில்டா | எல் | ரி | 724 |
| 1350 | கராச்சி மாலைதீவு | பி | கே | 776 |
| 1500 | திருவனந்தபுரம | ஐ | சி | 507 |
| 1515 | துபாய் மஸ்கட் | எஸ் | யூ | 545 |
| 1530 | சென்னை | யூ | எல் | 122 |
| 1800 | திருச்சி | ஐ | சி | 577 |
| 1950 | நெறிடா புக்குவோக்கா | யூ | எல் | 457 |
| 2020 | மாலைதீவு | யூ | எல் | 102 |
| 2350 | பாங்கொக் ஹொங்கொங | யூ | எல் | 423 |

### புறப்படும நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0725 | மாலைதீவு சூரிச் சார்ஜா | பி | பி | 602 |
| 0815 | திருச்சி | யூ | எல் | 131 |
| 0845 | பாங்கொக் ஹொங்கொங | யூ | எல் | 422 |
| 0915 | துபாய் | ஈ | கே | 800 |
| 1130 | மாலைதீவு வியன்னா | எல் | டி | 903 |
| 1200 | சென்னை | யூ | எல் | 121 |
| 1235 | திருவனந்தபுரம் | ஐ | சி | 573 |
| 1415 | ஹம்பேர்க் டசில்டர் | எல் | ரி | 724 |
| 1535 | கராச்சி | பி | கே | 776 |
| 1540 | திருச்சி | ஐ | சி | 507 |
| 1630 | மாலைதீவு | யூ | எல் | 101 |
| 1715 | துபாய் | எஸ் | யூ | 545 |
| 1840 | சென்னை | ஐ | சி | 577 |

## மார்ச் 16 (வெள்ளிக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0520 | பஹ்ரேன் | யூ | எல் | 142 |
| 0530 | குவைத் | கே | யூ | 361 |
| 0620 | லண்டன், துபாய் | யூ | எல் | 504 |
| 0745 | ஜெத்தா, ரியாத் | எஸ் | எல் | 340 |
| 1225 | பாங்கொக் | ரி | ஜி | 307 |
| 2000 | சிங்கப்பூர் | யூ | எல் | 303 |
| 2100 | மாலைதிவு | யூ | எல் | 102 |
| 2235 | சிங்கப்பூர் | எஸ் | கியூ | 402 |

### புறப்படும நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0115 | பாரிஸ், சிப்போல், அபுதாபி | யூ | எல் | 563 |
| 0130 | துபாய், சோபியா | இல் | இசட் | 582 |
| 0200 | ரோம | யூ | எல் | 581 |
| 0230 | துபாய், சூரிச், பிராங்போர்ட் | யூ | எல் | 547 |
| 0635 | பஹ்ரேன் | ஜீ | எப் | 142 |
| 0720 | குவைத் | கே | யூ | 361 |
| 0915 | ரியாத் | எஸ் | பி | 340 |
| 0930 | சிங்கப்பூர் | யூ | எல் | 302 |
| 1325 | பாங்தொக் | ரி | ஜி | 307 |
| 1730 | மாலைதிவு | யூ | எல் | 101 |
| 2330 | துபாய், லண்டன் | யூ | எல் | 503 |
| 2350 | சிங்கப்பூர் | எஸ் | கியூ | 402 |

குறிப்பு— யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பீ கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ் எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ் ரீ ஜி — தாய் எயர் வேய்ஸ், பீ ரீ — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத்தியேக சேவை, கே எல் —றோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம 452218 (விமான நிலையம)

(கு)

## வானொலி

### 15—3—1990

காலை —

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை ... — ஸ்ரீ பார்த்தசாரதி சுப்ரபாதம
5-30 சாயிபஜன்
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை - எம ரீ எம தாரிக்
5-55 பக்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம தொடர்ந்து அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 லயவிந்யாசம — ரி பாக்கியநாதன்
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 சுவாரா மலாயூ மலாய் மஞ்சரி அல்ஹாஜ் டி டி ஸல்டீன்
9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 தவில் கச்சேரி — வலயப்பட்டி சுப்பிரமண்யம
10-45 பக்திப்பாடல்கள்
11-00 வயலின் — டாக்டர் எல் சங்கர் எல் வைத்தியநாதன்
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இந்து சமயப்பேச்சு நாயன்மார் கண்ட வடகைலை தென் கைலை காட்சிகள் — தமிழின்பம கண பதிப்பிள்ளை
6-30 வளரும பயிர் — நடத்துபவர் வனஜா ஸ்ரீனிவாசன்
6-45 பாவளம — தொகுப்பு சில்லையூர் செல்வராஜன்
7-00 கிராம சஞ்சிகை வி ஏ சிவஞானம்
7-30 மெல்லிசைப் பாடல்கள்
7-50 உலகச் செய்திகள்

இரவு —

8-00 தர்ஜுமதுல் குர்ஆன்
8-05 திருக்குர்ஆன் விளக்கம நிகழ்த்துபவர் மௌலவி ஏ சி அகார் முகமமத்
8-20 கிராஅத்
8-25 முஸ்லிம செய்திகள்
8-30 மணிமொழிகள் வழங்குபவர் மௌலவி ஏ எச் எம அஜ்வாத்
8-40 தத்துவவித்துக்கள் தொடர்ப் பேச்சு வழங்குபவர் கலாநிதி அல்ஹாஜ் எம ஏ எம சுக்ரி
8-50 இஸ்லாமிய கீதம
8-55 வரலாற்றில் ஓர் ஏடும் குறிப்பும ஸலவாத்தும
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கலந்துரையாடல் — கலையுலகத்தேடல்கள் நடத்துபவர் சிவநேசச்செல்வன்
10-00 நாதஸ்வரம என் கே பத்மநாதன்
11-00 ஒலிபரப்பு முடிவு

### 16—3—1990 வெள்ளி

காலை —

5-00 நாதாஞ்சலி
5-05 திருமுறைப்பாடல்கள் — ஞானகுமாரி சிவநேசன்
5-30 பாமாலை - முருகன் பிள்ளைத்தமிழ் - பொன் சுந்தரலிங்கம
5-45 சைவ நற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை கலாநிதி அல்ஹாஜ் எம ஏ எம சுக்ரி
5-55 போதிமாதவனின் போதனைகள்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம தொடர்ந்து அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 வாத்திய மஞ்சரி
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 உருதுமஞ்சரி
9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 பக்திமஞ்சரி
11-00 நாதஸ்வரம - திருவிழா ஜெய்சங்கர்
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 திருவாசகம — எஸ் கணபதிப்பிள்ளை
6-45 துதிப்பாடற் பயிற்சி — வி எம நவரட்ணம
7-00 களத்துமேடு - கேள்வி பதில்
7-15 விவசாய நாடகம — வயலோடு வசந்தங்கள்
7-30 தவக்கால கத்தோலிக்க நிகழ்ச்சி - மலர்வேந்தன்
7-50 உலகச் செய்திகள்

இரவு —

8-00 தர்ஜுமதுல் குர்ஆன்
8-05 சமூகச்சித்திரம ஊடுருவல் பிரதி திக்குவல்லை ஸஃமா
8-15 கவிதைச்சரம தொகுப்பு- பாவலர் பஸீல் காரியப்பர்
8-30 குத்பா பிரசங்கம "வியங்கல்ல ஜுமஆப் பள்ளி வாசலில் நடைபெற்ற குத்பாப் பிரசங்கத்தின் தொகுப்பு
8-50 இறாஅத்
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 செந்தமிழ் வளர்த்த செமமல்கள்—க சி குலரத்தினம
9-45 கதாப்பிரசங்கம - வள்ளளார் - சிவஅன்பு
10-30 நினைவில் நிறைந்தவை
11-00 ஒலிபரப்பு முடிவு

## டெலிவிஷன்

### 15—3—1990

### ரூபவாஹினி

4-30 கல்வி நிகழ்ச்சி - விமகுப
5-00 செய்திகள் - சிங்களம
5-30 முத்தஹர கேள்வி நிகழ்ச்சி
6-00 முழமணிகளுக்கு அஞ்சலி
6-10 ஜெர்மன் மொழி வகுப்பு
6-30 செய்திகள் - தமிழ்
6-55 தரிசனம
7-25 "நெத்சர"
8-00 செய்திகள் - சிங்களம
8-30 "லைப் ஒன் ஏர்த்"
9-30 செய்திகள் - ஆங்கிலம
10-00 "சில்ப்பி சந்தல்ல"
10-30 செவிபிரிட்டி
11-20 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

6-00 முழமணிகளுக்கு அஞ்சலி
6-15 மெடிசினல் டிரக்ஸ்
6-30 செய்திகள் - சிங்களம
7-00 கலா ரசாங்க
7-30 பிரைட் அன்ட் பிறீவி
8-00 டியுக்ஸ் ஆப் அஸாட்
9-00 தச தெசின்
9-30 ஸ்ட்ரீட் லீகல்
10-00 செய்திகள் - ஆங்கிலம
10-26 ஸ்ட்ரீட் லீகல் — தொடர்ச்சி
10-45 ஒளிபரப்பு முடிவு

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்


## யாழ் இன்டர்சிட்டி ரயில் எப்படியும் இம்மாதத்திற்குள்

கொழும்பு மார்ச் 14

யாழ்ப்பாணத்திற்கான இன்டர் சிட்டி ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை— எப்படியும் இம மாத முடிவுக்குள் அது ஓடும—

ரயில் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரி ஒருவர் இதனை தெரிவித்தார்.

இந்த ரயில் சேவையை விரைவில் ஆரமபிப்பதென்ற தீர்மானதில் எவ்வித மாற்றமும இல்லை என்றும அந்த அதிகாரி தெரிவித்தார்—

[உ—ற]

கனரக வாகனங்களுக்கான

# போக்குவரத்து கட்டுப்பாடு

# காலையும், மாலையும் மட்டும்

கொழும்பு மார்ச் 14

கொழும்பு நகரில் காலையும மாலையும ஏற்படும போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும முகமாக குறிப்பிட்ட நேரங்களில் மட்டும கனரக வாகனங்களின் போக்குவரத்து மட்டுப் படுத்தப்படும.

காலை ஏழு மணியில் இருந்து ஒன்பது மணி வரையும மாலை 4 மணியில் இருந்து 6 மணி வரையும கனரக வாகனங்களின் போக்குவரத்தை மட்டுப்படுத்த சமபந்தப்பட்டவர்கள் இணக்கம தெரிவித்துள்ளனர்.

நகரில் வாகன நெருக்கடியைக் குறைப்பது தொடர்பாக போக்குவரத்து அமைச்சர் தலைமையில் உயர்மட்ட மாநாடொன்று நடைபெற்றது.

போக்குவரத்து, பெருந் தெருக்கள் அமைச்சில் நடைபெற்ற இமமாநாட்டில் கொழும்பு மாநகர பிதா ஹுசேய்ன் முகமமது போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் லக்ஷ்மன் டி மெல். பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏ டபிள்யூ யூ பெர்னாண்டோ, பெருந்தெருக்கள் ராஜாங்க அமைச்சின் செயலாளர் சிசில் அமரசிங்க, துறைமுக அதிகார சபையின் தலைவர் ஏ டி வாஸ் குணவர்தன ஆகியோர் உட்பட பல உயர் அரசாங்க அதிகாரிகளும,

இலங்கை ஏற்றுமதியாளர் கவுன்சிலின் தலைவர் டபிள்யூ டி எல்லாவல, கப்பல் முகவர் சங்கத் தலைவர் ஏ எம பண்டிதகே, கொள்கலன் மற்றும டிப்போ சங்கத் தலைவர் ஜி எம பெரேரா ஆகியோரும கலந்து கொண்டு போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது பற்றி பரிசீலனை செய்தனர்—

பகிர கடை கிடக்கும நேரம அமைச்சு வர்கள்ளதைக்க கட்டிடக்கக அளவு வாகன போக்குவரத்து நெரிசல் குறைக்கள்ள என்பதை இமமாநாட்டில் கலந்து கொண்ட அனைவரும ஏற்றுக் கொண்டனர்.

கொழும்பு துறைமுகத்தை நோக்கிச் செல்லும அல்லது துறைமுகத்திலிருந்து பாரப் பகிர கொள்கலன் தாங்கிகள் எந்தெந்த பாதைகள் வழியாக செல்ல வேண்டும என்பதை சுட்டிக்காட்டும புதிய திட்டம இமமாநாட்டின் போது சமபந்தப்பட்டோரின் பார்வைக்கென முன்வைக்கப்பட்டது. இத்திட்டத்தை போக்குவரத்துப் பொலீஸார் வகுத்துள்ளனர்.

வாகன போக்குவரத்து தங்கு தடையின்றி நடைபெற ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள வீதித் தடைகளையும, ஸ்பீட் பிரேக்கர் எனப்படும மேடுகளையும நீக்குமபடி சமபந்தப்பட்ட அதிகாரிகளை வேண்டுவதென்ற இமமாநாட்டில் தீர்மானிக்கப் பட்டது.

(ல—032)

# இலங்கை அகதிகள் வருகைக்கு ஒரிஸ்ஸா பூர்வீகக் குடிகள் எதிர்ப்பு

புவனேஸ்வர் மார்ச் 14

இலங்கைத் தமிழ் அகதிகள் சுமார் 1300 பேர் ஒரிஸ்ஸா மாநிலத்துக்குக் கொண்டு வரப்பட்டது குறித்து பூர்வீகக் குடிகள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்—

ஈ பி ஆர் எல் எப் செயலாளர் நாயகம திரு கே பத்மநாபா வடக்கு கிழக்கு மாகாண சபையின் பல அமைச்சர்கள் ஈ பி ஆர் எல் எப் - மற்றும ஈ என் டி எல் எப் - டெலோ ஆகிய இயக்கங்களின் உறுப்பினர்கள் மாகாண சபை அதிகாரிகள் அவர்களின் குடும்பத்தினர் முதலான பலர் கப்பலிலும விமானத்திலும ஒரிஸ்ஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள்—

இவர்கள் எல்லோரும சுமார் 620 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மல்குன்திரியிலும சாதிக்குடாவிலும உள்ள முகாமகளில் வைக்கப்படுகிறார்கள்—

அதற்குத்தான் அங்குள்ள பூர்வீகக் குடிகளின் சங்கங்கள் ஆட்சேபம தெரிவித்து மாவட்ட கலக்டருக்கு மகஜர்கள் கொடுத்திருக்கின்றன—

தங்களின் (பூர்வீகக் குடிகளின்) நல்வாழ்வை அடியோடு கவனிக்காமல் கைவிட்டு பிறர்க்காக மேன்மேலும அகதிகளைக் கொண்டு வருவதா என்று சங்கங்கள் கேட்டிருக்கின்றன—

இதேவேளை திரு பத்மநாபா கருத்துத் தெரிவிக்கையில் எவ்வளவு விரைவில் தாயகத்திற்குத் திருமப முடியுமோ அவ்வளவு விரைவில் திருமபுவது என்று தீர்மானித்திருக்கிறோம என்று சொன்னார்—

வடக்கு கிழக்கு முதலமைச்சர் திரு அ வரதராஜப் பெருமாளும தமது மனைவி மகள் மற்றும சில அதிகாரிகள் சகிதம் இந்திய விமானப் படை விமானத்தில் ஏறிச் சென்று விட்டார்— அவர் எங்கு சென்றார்— இப்போது எங்கே இருக்கிறார் என்ற விபரங்கள் மர்மமாகவே உள்ளன—

[உ]

## சமய நிகழ்ச்சிகள்

### சனி பகவானுக்கு விசேட அபிஷேகம்

கொழும்பு மார்ச் 14

இமமாதம 20ஆம திகதி செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு மேல் சனி பகவான் மகர ராசிக்குப் பிரவேசிக்கிறார்.

சனிப் பெயர்ச்சியினால் ஒவ்வொரு சனிக்கிழமையும சனி பகவானுக்கு விடாமல் அபிஷேகம செய்து வர வேண்டும.

கொழும்பு ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தானத்தில் உலக நலனுக்காகவும, சகல மக்களின் சேமத்திற்காகவும சனி பகவானுக்கு விசேட அபிஷேகம செய்யப்படும.

சனி பகவான் டெப் பெயர்ச்சியை முன்னிட்டு இன்று 15ஆம திகதி முதல் 20ஆம திகதி வரை தொடர்ந்து விசேட ஆராதனைகள் மேற்கொள்ளப்படும.

பக்தர்கள் அனைவரும விசேட அபிஷேகத்தில் கலந்து கொண்டு அருள் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

(ல—ங)

# வரதர் தலைமறைவு; எங்கே இருக்கிறார் என்று தெரியாது

## 19 நிபந்தனைகள் பற்றி யாருடன் பேசுவது?—ரஞ்சன்

கொழும்பு மார்ச் 14

தலைமறைவாகி விட்ட வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் எங்கே இருக்கின்றார் என்பது தெரியவல்லை,

மொரிஷியசில் இருப்பதாக சிலரும, இந்தியாவில் இருப்பதாக வேறு சிலரும கூறுகின்றனர்.

தலைமறைவாகி விட்ட ஒரு மனிதருடன் எப்படி 19 நிபந்தனைகள் தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்துவது?

வெளிவிவகார அமைச்சரும, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான போதே மேற்கண்டவாறு அமைச்சர் கேட்டார்.

தொடர்ந்து பதில் அளித்த அமைச்சர் விஜேரத்ன மேலும கூறியதாவது—

ஆறாவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்கி விடுமபடி புலிகள் கேட்பது ஒன்றும இரகசியம இல்லை, அதை மூடி மறைக்க வேண்டிய அவசியமும இல்லை.

புலிகள் முன் வைத்துள்ள ஏனைய கோரிக்கைகளைப் போன்றே இதுவும் ஒன்று.

இருப்பதாக வேறு சிலரும கூறுகின்றனர், ஆனால் எங்கு இருக்கின்றார் என்பது தெரியாது.

இவரால் முன்வைக்கப்பட்டுள்ள 19 நிபந்தனைகள் தொடர்பாக யாருடன் பேசுவது?

தலைமறைவாகி விட்ட ஒரு மனிதருடன் பேசுவது எப்படி?

மாகாண சபையைக் கலைத்து விடுவது தொடர்பாக இன்னும இறுதி முடிவு எடுக்கப்படவில்லை, சட்டப் பிரச்சினைகள் பற்றி ஆராயப்படுகிறது,

இப்பொழுது அங்கே முதல் அமைச்சர் இல்லை, முழுப் பொறுப்பும ஆளுநரின் கையிலேயே தங்கி உள்ளது,

இம்மாதம 31 ஆம திகதிக்குள் எல்லா இந்தியப்படைகளும வெளியேறி விடும, அங்கு சட்டத்தையும ஒழுங்கையும நிலை

# விவாதம் குழப்ப நிலை காரணமாக குழுநிலையில் ஒத்திவைப்பு

கொழும்பு மார்ச் 14

பௌத்த சாசன நிதியம் தொடர்பான விவாதத்தின் போது ஆளும கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி தொடர்பான சர்ச்சையினால் சபை குழு நிலையில் ஒத்திவைக்கப்பட்டது—

சபையில் அமைதியை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயன் அளிக்கவில்லை— இதனால் பிரதி சபாநாயகர் திரு காமினி பொன்சேகா சபையைக் குழுநிலையில் ஒத்திவைத்தார்—

நேற்று முன்தினம காலை 9—00 மணி முதல் 12 மணிவரை மேற்படி சட்டவரைவின் இரண்டா

வந்தது— எதிர்க் கட்சியினரின் சில திருத்தங்கள் நிராகரிக்கப் பட்டன—

இறுதியாக குழுநிலையில் மேற்படி சட்டம தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தும தறுவாயில் கல்வி கலாசார தகவல்துறை அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம லொக்குபண்டார எதிர்க் கட்சியினரின் திருத்தங்களை ஏற்க முடியாது என பேசினார்—

கல்வி அமைச்சர் சுமார் 45 நிமிடங்கள் பேசிக் கொண்டே இருந்தார்—

இதனை எதிர்க்கட்சியினர் வன்மையாக எதிர்த்தனர்—

கூறினார்—

எனினும அமைச்சர் லொக்கு பண்டார தொடர்ந்தும பேசிக் கொண்டே இருந்தார்— சபையில் கூச்சல்கள் அதிகரித்தன—

எனவே மேற்படி விடயம தொடர்பான குழுநிலை விவாதத்தை ஒத்தி வைப்பதாக பிரதி சபாநாயகர் அறிவித்தார்—

தொடர்ந்து சபையில் இரண்டாவது நிகழ்ச்சியாக தேசிய முக்கியத்துவம வாய்ந்த தொல் பொருள் அமைவிடங்கள் தொடர்பான சட்டவரைவு பரிசீலனை செய்யப்பட்டு சபையில் அங்கீகரிக்கப்பட்டது—

[ல—ய]

## ஜீ. சி. ஈ. மாணவருக்கு

## மஹஜன சம்பத

கொழும்பு மார்ச் 14

நேற்று முன்தினம இழுக்கப்பட்ட மஹஜன சமபத 287 ஆம இலக்க குலுக்கல் முடிவுகள் வருமாறு—

வெற்றி பெறும எண்கள்

வார்த்தை நடத்துவது?

வெளிவிவகார அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இப்படிக் கேட்டார்—

நேற்று சபை ஒத்திவைப்பு வேளையின் போது ஸ்ரீ ல சு கட்சி உறுப்பினர் திரு தர்மசிறி சேனநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றிற்குப் பதில் அளிக்கும் ஏனைய கோரிக்கைகளைப் போன்றே இதுவும் ஒன்று.

இந்த ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக ஜனாதிபதி தீவிரமாகப் பரிசிலனை செய்து வருகின்றார்.

தனிநாடு பிரகடனம் செய்து விட்டு திரு வரதராஜப்பெருமாள் தலைமறைவாகி விட்டார்.

மொரீஷியஸ் தீவில் இருப்பதாக சிலரும், இந்தியாவில்

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் 1990 மார்ச் 13 இல்.

| | | | | |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டலார் | ரூ | 3998–50 | ரூ | 4001–50 |

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய உடன் மாற்று விகிதம்— 1990 மார்ச் 13 இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ | 3997–45 | ரூ | 4002–50 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ | 6445–19 | ரூ | 6471–09 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ | 2330–35 | ரூ | 2348–14 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ | 685–87 | ரூ | 697–30 |
| 100 ஜப்பான் யென் | ரூ | 26–1742 | ரூ | 26–4244 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப் பிடிக்கும் மத்திய வங்கி வாங்கும் விகிதம் ஆகக் குறைந்த வாங்கும் விகிதம்: ஆகக் கூடிய விற்கும் விகிதம்;

| | | | | |
|---|---|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ | 117–85 | ரூ | 118–28 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ | 612–33 | ரூ | 614–76 |
| 100 இந்திய ரூபா | ரூ | 231–56 | ரூ | 232–52 |
| 100 ஈரான் ரியால் | ரூ | 56–45 | ரூ | 56–67 |
| 100 நேபாள ரூபா | ரூ | 139–08 | ரூ | 139–66 |
| 100 பாகிஸ்தான் ரூபா | ரூ | 185–89 | ரூ | 186–66 |

இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இண்டிபெண்டண்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (தெமட்டகொடை) தபால் பெட்டி இல 1613 வெளியீட்டு திகதி 15 மார்ச் 1990—

DINAPATHI. 5, Gunasena Mawatha, Colombo 12
P.O. Box 1613

...குள் எல்லா இந்தியப் படைகளும் வெளியேறி விடும், அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் பொறுப்பை இலங்கை அரசாங்கமும், பொலிஸாரும் ஏற்பர்.

இப்படி திரு ரஞ்சன் விஜேரத்ன பதில் அளிக்கும் போது குறிப்பிட்டார்.

திரு தர்மசிறி சேனாநாயக்க கேள்வி எழுப்பும் போது குறிப்பிட்டதாவது—

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரேமதாச அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கும்படி கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் இன்னும் தமிழீழக் கோரிக்கையையும், ஆயுதங்களையும் கைவிடவில்லை. இந்திய அமைதி காக்கும் படையினர் வெளியேறும் இடங்களை எல்லாம் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கு மாகாண சபை இயங்குவதில்லை. ஈ பி ஆர் எல் எப் 19 கோரிக்கைகளை விடுத்து ஒரு வருட அவகாசமும் வழங்கியிருக்கிறது.

இந்நிலையில்

(அ) ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்க அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) வடக்கு, கிழக்கு மாகாண சபை கலைக்கப் படுமா?

(இ) ஈ பி ஆர் எல் எப் இன் 19 கோரிக்கைகளும் பரிசீலிக்கப்படுமா?

(ஈ) மார்ச் 31 உடன் இந்தியப் படைகள் வெளியேறிய பின்னர் அந்தப் பகுதிகளில் அரசின் நிலைப்பாடு என்ன?

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன இதற்கான பதிலைத் தர வேண்டும்— எனக் கேள்வி எழுப்பியிருந்தார் திரு தர்மசிறி சேனாநாயக்கா— (ல—கு—ய)

நேற்று முன்தினம் காலை 9–00 மணி முதல் 12 மணிவரை மேற்படி சட்டவரைவின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்றது—

இரண்டாவது வாசிப்பின் போது எல்லா எதிர்க் கட்சிகளும் அரசுடன் இணைந்து இந்தச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தன—

தொடர்ந்து இச்சட்டம் குழு நிலையில் பரிசீலனை செய்யப் பட்ட போதுதான் பிரச்சினை ஏற்பட்டது—

மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு தினேஷ் குணவர்த்தன திருத்தமொன்றை கொண்டு வந்தார்—

அதாவது பௌத்த சாசன நிதியத்தில் பௌத்தர்கள் மட்டுமே இடம்பெற வேண்டும் என்ற திருத்தம் இடம்பெற வேண்டும் என்று குறிப்பிட்டார்—

ஒரு சட்டத்தில் “பௌத்தர்கள்” மட்டும் என்று ஒரு அக்ஷரத்தை ஏற்படுத்துவது அரசமைப்புக்கு முரணானது— எனவே இந்த திருத்தத்தை ஏற்க முடியாது என்று ஆளும் கட்சிகள் சார்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது—

எனினும் மேற்படி திருத்தம் தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது ஆளும் கட்சியின் வாதம் தோற்கடிக்கப் பட்டது—

வாக்கெடுப்புக்காக கோரம் மணி ஒலிக்கப்பட்டும் அரச தரப்பில் போதிய உறுப்பினர்கள் சபைக்கு வரவில்லை—

இதுவே ஆளும் கட்சிக்கு முதலாவது தோல்வியை ஏற்படுத்திக் கொடுத்து விட்டது—

தொடர்ந்து மதிய உணவு இடைவேளையின் பின் சபை 1–30 மணிக்கு மீண்டும் கூடிய போது இதனை குழுநிலையில் பரிசீலனை செய்தது—

அப்போது அரசு மேலும் பல திருத்தங்களைக் கொண்டு [illegible] இருந்தார்—

இதனை எதிர்க்கட்சியினர் வன்மையாக எதிர்த்தனர்— ஸ்ரீ ல சு கட்சியைச் சேர்ந்த திரு தி மு ஜயரத்ன ஹேமகுமார நாணயக்கார லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரும் மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு தினேஷ் குணவர்த்தன ஐக்கிய சோஸலிஷ முன்னணியைச் சேர்ந்த அத்தாவுட செனவிரத்ன ஆகியோர் தொடர்ச்சியாக இதனை ஆட்சேபித்துப் பேசினர்—

இவ்வேளையிலேயே ஆளும் கட்சியினருக்கும் எதிர்க் கட்சியினருக்கும் இடையில் பலத்த கருத்து மோதல்கள் ஏற்பட்டன—

ஆளும் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியை மூடி மறைப்பதற்கே அமைச்சர் இப்படி பேசி இங்கு சர்ச்சையை எழுப்பி வருகிறார் என எதிர்க் கட்சியினர் ஒரே குரலில் குற்றஞ்சுமத்தினர்—

சபைக்குத் தலைமைதாங்கிய பிரதி சபாநாயகர் சபையில் அமைதியை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் பயன் அளிக்கவில்லை—

சர்ச்சைகள் மேலும் அதிகரித்தன—

இவ்வேளையில் முன்னாள் சபாநாயகரும் ஸ்ரீ ல சு கட்சி உறுப்பினருமான திரு ஸ்டேன்லி திலகரட்ன ஒரு ஆலோசனையை முன்வைத்தார்—

அதாவது பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படாத பட்சத்தில் சபையை 30 நிமிடங்களுக்கு ஒத்திவைத்து கட்சித் தலைவர்களைக் கூட்டி தீர்வு காணலாம் என்று அவர் குறிப்பிட்டார்—

எனினும் வாக்கெடுப்பு நடத்தக் கூடிய இறுதிக் கட்டத்தில் நெருங்கிரோம்— அமைச்சர் பேச்சை நிறுத்தி வாக்கெடுப்பு [illegible] வேண்டும் என ஸ்ரீ ல சு கட்சி [illegible] ரான திரு தி மு ஜயரத்ன

## மாணவருக்கு கருத்தரங்கு

கொழும்பு, மார்ச் 14

அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் மேல் மாகாண கிளையுடன் இணைந்து ஜி சி ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு முக்கிய பாடங்களுக்குரிய கருத்தரங்கு ஒன்றை நடத்துகிறது.

கொழும்பிலும் அதனை அண்மிய புறநகர்களிலும் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் இக் கருத்தரங்கு நடத்தப்படும்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களின் விவரங்களை பாடசாலை அதிபர்கள் உடனடியாக சங்கச் செயலாளர் ஜனாப் நிஸாம் ஷெரீபுக்கு அறிவிக்க வேண்டும் எனக் கேட்கப் படுகின்றனர். (ஐ-வ)

ஆம் இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு—

வெற்றி பெறும் எண்கள்

**265535**

முதலாம் பரிசு
ரூ 5 லட்சம்
(எல்லா 6 எண்களும் சரியாக இருப்பின்)
3 இரண்டாம் பரிசுகள்
தலா ரூ 50 ஆயிரம் வீதம்
(இறுதி 5 எண்களும் சரியாக இருப்பின்)
33 மூன்றாம் பரிசுகள்
தலா ரூ 5 ஆயிரம் வீதம்
(இறுதி 4 எண்களும் சரியாக இருப்பின்)
335 நான்காம் பரிசுகள்
தலா ரூ ஆயிரம் வீதம்
(இறுதி 3 எண்களும் சரியாக இருப்பின்)
3294 ஐந்தாம் பரிசுகள்
தலா ரூ நூறு வீதம்
(இறுதி 2 எண்களும் சரியாக இருப்பின்)

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### தட்டெழுத்தாளர் சேவையின் 11 ஆம் வகுப்பு “ஆ” பிரிவுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை (தமிழ்) 1990 – மார்ச்

என் 176

1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆந் திகதி நடைபெறவிருக்கும் மேற்படி பரீட்சைக்கான பிரவேச அட்டைகளும் நேர அட்டவணையும் அஞ்சல் செய்யப்பட்டுள்ளது என்பதை பரீட்சார்த்திகளுக்கு இத்தால் அறியத் தரப்படுகிறது—

ஆத்தர் வெதமுல்ல
பரீட்சை ஆணையாளர்

5/15/100,
மலே வீதி. கொழும்பு–02–
1990 மார்ச் 09 ஆந் திகதி–

473